
# அத்தனையும் முத்துக்கள்



– இரா. ராம்சங்கர்

**ATHANAIYUM MUTHUKKAL**
**அத்தனையும் முத்துக்கள்**

By
**R.R. Ram Shankar**

Copies :

Printed by :

Published by :


**Auxilium Publishers**
Ambattur, Chennai-53.

# சமர்ப்பணம்



மாடு பெயரொண்டு வாழ்வெனும்
காடு தன்னைக் கடக்க
ஏடு தன்னை அளித்து ஏற்றமளிக்கும்
பீடு மொழியுடை பிள்ளை
கலைவாணி தனக்கு என்
கவிதைகள் யாவும் சமர்ப்பணம் !

# சமர்ப்பணம் !


உலகிற்கு அறிமுகம்
செய்த என்
பெற்றவருக்கும்,
வெற்றிக்கு அறிமுகம்
செய்த
என் சிந்து
மற்றும்
அன்பு நண்பன்
அகிலுக்கும்



# முன்னுரை

இன்பங்கள் கரைந்தொழுகும் இந்த நொடியை அளித்த இறைவனுக்கு நன்றி !

விண்ணுறு மழைத்துளிகள் விரைந்தே பல கோடி பூமியில் படினும், ஒருதுளி மட்டுமே சிப்பியில் முத்தாய் போகிறது ! அது போல எத்தனையோ கருத்துகள் எவர் வாய் கேட்பினும், அத்தனை தமிழையும் ஒருங்கிணைந்தே மரபு, புதுக்கவிதை, உரை நடைக்கவிதை என்று, ஓர் மலர் செண்டைப் போல் இங்கே தொகுத்து அளித்திருக்கிறேன்! இந்த கவிதைத் துளியும் முத்தாகும் என்ற நம்பிக்கையே இம் முயற்சி !

விண்ணளவு அறிவொண்டே வியப்புறு படைப்புகள் பேணும் பேரறிவாளரின் பெருஞ்சபையில் அடியேனின் எளிய தமிழ் முயற்சி ! பிழைகள் பொறுத்தருள வேண்டுகிறேன்! விழியிடைக் கருவென்றே நெஞ்சகத்தில் வளர்த்தி, நல்வழி சொல்லும் மொழியாய், அன்னையாம் என் அன்பு தமிழுக்கும், என்மீது அன்பு கொண்ட அத்தனை கோடி நெஞ்சங்களுக்கும், சான்றோர் தமக்கும் என் தலை தாழ்ந்த வணக்கங்கள்!

கட்டுரை வடிவில் கவிதைகள் வரைதல் இதுவே முதல் முயற்சி ! ரசித்து ருசித்து பாருங்கள் ! நீங்கள் விருந்தாய், வண்ணமுற வகையாய் பெரும் வரிசையாய் எண்ணம் போல் ரசித்திடவே ரகத்திற்கொன்றாய் அடுக்கி வைத்துள்ளேன் ! இந்தக் கவிதைகளில் தமிழ் பேசும் ! கொஞ்சும் ! கோபத்தில் சாடும் ! காதலிக்கும் ! கற்பனையை மிஞ்சும் !

கவிதை மழை பொழிகிறது!

வாருங்கள் நனைவோம் !

வணக்கத்துடன்....

**இராம் சங்கர்**

அன்பு நண்பருக்காக....

திரு. **R.R. ராம்சங்கர்** ஒரு சிறந்த கவிஞர். மூன்று முறை கவிதைக்காக மாநில அளவில் பரிசு வென்றவர். இந்த கவிதை தொகுப்பு அவரின் முதல் படைப்பு. இதை வாசகர்களாகிய நீங்கள் படித்து இந்த முயற்சியை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இது அவருடைய நீண்ட நாள் கனவு. அதை நிறைவேற்றித் தாருங்கள். மேலும் இந்த கவிதை பற்றிய உங்கள் மேலான கருத்துக்களை நீங்கள் அவரின் மின்னஞ்சல் மூலமாக மற்றும் சிற்றஞ்சல் மூலமாகவும் தெரிவிக்க வேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**E-mail ID : iamramshankar@rediffmail.com**
**sindhu_sdnm@yahoo.co.in**
**Cell : 9790903167 / 69.**

வாழ்த்துங்கள் ! வளருவோம் !

அன்பு தோழி...
**சிந்து**

கவிதைகள் என்பவை குழந்தைகளைப் போல....

ஒவ்வொரு கவிஞனும் தன் எண்ணங்களை உள் வாங்கிய உணர்வுகளை ஊறிட்டு வரும் உணர்ச்சிகளை என யாவற்றையும் கருவாய் சுமந்து இக்கவிதைக் குழந்தைகளை பிரசிவிக்கிறான். அவ்வகையில் நூலாசிரியர் நண்பர் ராம் சங்கர் தனக்கே உரிய நடையில் காதலை, அன்பை, சமாதானத்தை, சமுதாய அவலங்களை கவிதையாய் வெளிப்படுத்தி இருக்கிறார். இவற்றில் பல பரிசு போட்டிகளில் வெற்றி பெற்ற கவிதைகள். படித்துப் பாருங்கள் ! ஒவ்வொரு படைப்பாளிக்கும் வெவ்வேறு திறமைகள் இருக்கும் ! கவிஞர்களில் கூட புதுக்கவிஞர்கள், மரபுக் கவிஞர்கள் இன்னும் பலவாய் விரிந்து கொண்டே செல்கிறது வேற்றுமைகள் ! நமது படைப்பில் புதுமை, மரபு, ஹைக்கூ என அனைத்தும் கலந்து உரைநடை கவிதை, என்ற ஒன்றை உலகிற்கு அறிமுகப்படுத்தி அத்தனையும் முத்துக்களாக நண்பர் ராம் சங்கர் அளித்துள்ளார்.

சுவைத்து பாருங்கள் ! உண்மையில் அத்தனையும் முத்துக்கள் ! நல்ல கவிதைகளை நறுமணமாய் நற்றமிழாய் நயம் பெறவே புத்தகமாய் பதித்ததால் நெஞ்சம் நிறைந்தே எமது பதிப்பகம் பெருமை கொள்கிறது.

இந்தப் பதிப்பு உலகம் முழுதும் சென்று தமிழாற்ற வேண்டுமாய் இறைவனை வேண்டுகிறோம்.

நன்றி !

அன்பு நண்பர்

**P. நந்தகுமார்**

**Auxilium Publishers**

# பஞ்ச பூத கவிதைகள்

தொடர்ந்து வரும் கவிதைகளில் பஞ்ச பூதங்களாம் காற்று, நெருப்பு, நீர், ஆகாயம், மண் இவை அனைத்தையும் அவற்றின் பெருமையையும் இயற்றியுள்ளேன். இப்பரந்த பூமி தன்னில் உயர்ந்தவை எது காற்றா ? நீரா ? நெருப்பா ? மண்ணா ? ஆகாயமா ? ஒவ்வொரு கவிதையிலும் மற்ற சக்திகளோடு ஒப்பிட்டு அதுவே சிறந்தது போல தோற்றம் தருமாறு மிக ஆழ்ந்த வார்த்தைகள் தேடி படைத்துள்ளேன் !

சற்றே என் பக்கங்கள்.

| | | |
|---|---|---|
| காற்று | - | முதல் சக்தி |
| நெருப்பு | - | இரண்டாம் சக்தி |
| தண்ணீர் | - | மூன்றாம் சக்தி |
| ஆகாயம் | - | நான்காம் சக்தி |
| மண் | - | ஐந்தாம் சக்தி |

(முதல் சக்தி) **காற்று** (புதுக் கவிதை)

**காற்று !**

உண்மை !
விரைகின்ற விநாடிமுள்ளின் உழைப்பு !
இதயத் துடிப்பின் மூலதனம் !

**காற்று !**

உயிர்தரும் உலகத் தந்தை !
கண்ணில் தெரியாமல்
கருணை புரிவதால் கடவுள் !

நொடிக்கு நொடி தேவைப்படும் ஏக்கம் !
ஆகாயம் ! விண்வெளியில் மட்டும் !
நீர் ! நிலவெளியில் மட்டும் !
நிலம் ! சமவெளியில் மட்டும் !
நெருப்பு மண்வெளியில் மட்டும் !
ஆயின் நீ மட்டுமே
விண்ணும், மண்ணும் நீலக்
கடலும், நெருப்புமாய் எங்கும்
வினைபுரியும் வேதிப் பொருள் !

**காற்று !**

நீரின் கருவானாய் !
நெருப்பின் உருவானாய் !
விண்ணில் அருவானாய் !
மண்ணில் மறைந்தே
கண்ணிற் தெரியா கற்பனையானாய் !

**காற்று !**

காதுமடல் வருடும் காதல் சுகம் !
ஊதுகுழல் வழியே இசைப் பயணம் !
கைகள் நீட்டி கட்டியணைக்கும் காருண்யம் !
அனுமதியின்றி உயிர்வரை செல்லும் அதிகாரம் !

சினந்தால்,

மிச்சமின்றி தூக்கி எறியும் அச்சப் படலம் !
காற்றிடம் கவனம் தேவை !
காலங்கள் மறைத்து கரைத்து விடும் !
காலம் உள்ளவரையில் இல்லை
காற்று உள்ளவரையில் மானிடம் வாழும் !
காற்றுப் பெண் வருகிறாள் !
கதவுகளை திறந்து கொள்ளுங்கள் !

(இரண்டாம் சக்தி)

# நெருப்பு



## நெருப்பு !

கலாச்சார மாற்றத்தின் கருப்பொருள் !
வெளிச்ச விழுதுகளின் உருப்பொருள் !
நிறங்கள் எதுமில்லா ஓர் நிர்வாணம் !
உருவங்கள் கடந்து நிற்கும் ஒளிமயம் !
காற்று ஈரம் ; என்றால் நெருப்பு வீரம் !
கைகள் கட்டி சிரம் வணங்கும் சத்தியம் !

## நெருப்பு ! முன்னேற்றம் !

★ அச்சமின்றி கிடைத்தவை யாவும்
மிச்சமின்றி தன்னுள் வாங்கும் அடக்கம் !
★ மேலெழுந்து வளரும் ஆணவம் !
★ சற்றே சிறியதாய் இடம் கொடுத்தால்
முற்றிலும் சுற்றியே வளைத்திடும் பேராசை !

## நெருப்பு துவக்கம் !

★ அக்கினி சாட்சியாய் ஆதவனோடு
தினமும் தொடங்குகிறது காலைப் பொழுது !
சிக்கி முக்கியில் திக்கித் தவித்தே
நெருப்புக் குழந்தையின் முதல் பிரசவம் !
நெருப்பு ஆத்திக தேடலில் அடிப்பொருள் !

★ விளக்குகளாய் மெழுகு வர்த்தியாய்
யாகத்தீயாய் ஆயிரம் பெயர்கள் !

★ காற்றைக் கண்டோம் !
கட்டியணைத்தோம் !
நீரினைக் கண்டோம் !
பூமி குளிர்ந்தோம் !
வான்வெளி கண்டே
வரம்புகள் புரிந்தோம் !
மண்ணில் மக்களாய்
மாட்சிமை கண்டோம் !
கனல் உனை மட்டுமே
கடவுளென் றேத்தினோம்

★ நெருப்பிடம் கவனம் தேவை !
நெருங்கிடாமல் உள்வைக்க வேண்டும் !
அத்தனையும் ஒன்றாக்கும் அபாயம் !
நெருப்பு மகள் வருகிறாள் !
விழிகளை திறந்து வைத்தே
அவள் மொழிகள் கேட்போம் வாருங்கள் !

(மூன்றாம் சக்தி) **தண்ணீர்**

**தண்ணீர் ! தாய் !**

பிறப்பு முதல் இறப்பு வரை
பிரியாத பெருங் கருணை !
தாகங்கள் தீர்த்தே
தவிப்புகள் யாவுமழிக்கும் யோகம் !

**தண்ணீர் ! சொத்து !**

பூமியின் புதையல்களில்
ஊறி நிற்கும் ஊற்றே முதல் புதையல் !
நம்மிடை வாழ அருவியாய் தன்னிலை தாழ்த்தி
மலை உச்சியிலிருந்து மண்ணுக்கு வரும் தியாகம் !
ஆறுகளாய் ஓடிச்சென்றே அத்தனை
அழுக்கையும் கரைத்து விடும் கருணை !

நடந்து செல்லும் வழியில்
இடம் பிடித்து போனால்
ஏரியாய், குளமாய், குட்டையாய்
தங்கி நின்று தயை புரியும் அன்பு !

கால்கள் நீட்டி, கண்கள் பூட்டி
விரிந்திருக்கும் பிரம்மாண்டமாய் கடல் !

**தண்ணீர் தாயமுதம் !**

விண்ணுக்கும் மண்ணுக்கும் மேகமாய்
மழையாய் வேகமாய் தினம் பயணம் !
தண்ணீர் ! உயிர் நீர் !
செடிகளின் வேர்கள் வழியாய்

மிருகங்களின் வயிற்றினுள்,
மனிதப் பசிக்குமாய்
தண்ணீர் உணவு சங்கிலி !

நெருப்பு காதலியின் முத்தம் என்றால்
தண்ணீர் தாயின் அன்பு வருடல் !


காற்று உணரப்படுவது !
நெருப்பு தெரியப்படுவது !
மண் வாழப்படுவது !
ஆகாயம் அறியப்படுவது !

நீர் மட்டுமே உண்ணப் படுவது !
உயிராய் எண்ணப்படுவது !

நடந்தால் நீரலையாய் ;
சுழன்றால் ஆழிப்பேரலையாய் ; அபாயம் !

நீரிடம் கவனம் தேவை !
மொத்தமும் நனைத்து நிஜங்கள் காட்டி விடும் !

நீர்மகள் வருகிறாள் !
வாருங்கள் கொஞ்சம் நனைவோம் !



(நான்காம் சக்தி) **ஆகாயம்**

**ஆகாயம் ! அற்புதம் !**

★ சுட்டெரிக்கும் சூரியனும்
நெஞ்சினிக்கும் நிலாப் பெண்ணும்
சூல்கர்ப்பம் தாங்கும் ஆச்சர்யம் !

★ ஆயிரம் பிள்ளைகளில்
ஒரு பிள்ளை நட்சத்திரம் என்பார்கள் !

★ ஆயிரம் நட்சத்திரங்களை
பிள்ளையாய் பெற்றது அபூர்வம் !

**ஆகாயம் ! பிரதாபம் !**

★ வெப்பமும், குளிரும் வேறென்பது விதி !
ஆகாயத்தில் மட்டும் அன்பே விதி !

★ வெப்பத்தால் வெப்பமே விளையுமென்றால்
நீர் மேகமாவதும் குளிர்ந்தே
தாகமடங்கி மழையாவதும் எப்படி நடக்கும் ?

**ஆகாயம் ! வீடு !**

காற்றின் மொட்டைமாடி நடைபயணம் !
மின்னலாய் நெருப்பின் நீட்சிக் கோடுகள் !
மேகமாய் தண்ணீரின் மென் கோலங்கள் !
பகலவனின், பளிச்சிடும் நிலவின்
பல்லாயிரம் சூரியக் குடும்ப சாம்ராஜ்யம் !
உயரத்திலிருந்து உலகைப் பார்க்கும் உன்னதம் !

**ஆகாயம் ! அழிவற்றது !**

★ கெட்டவை சேர்ந்திட காற்றும் மாறிவிடும் !
★ நச்சுகள் சேர்ந்திட நீரும் நலமழிந்து போகும் !
★ மண்ணும், நெருப்பும், மற்றவை சேர மாண்டு போகும்
★ ஆகாயம் மட்டுமே அழிவில்லாதது !
★ மற்றவை போல் கூட்டவும் குறைக்கவும் முடியா சமநிலை !

ஆயிரம் இடிகளும் மின்னல்களும்
காற்றும், மழையும் அடித்தாலும்
ஆட்சி செய்யும் கம்பீரம் !

**ஆகாயம் ! நிலையானது !**

★ பக்கத்து நாடெனவும், பல்வேறு ஊரெனவும்
பாரெங்கும் இடத்திற் கொன்றாய்

★ நீரும், காற்றும், மண்ணும்
வேற்றாய் பல தோற்றம்
பாரெங்கும் இடத்திற்கொன்றாய் மாறும் !

★ ஆகாயம் அன்னையாய்
அளவில் மாறாது அமைதியாய் இருக்கும் !

★ ஆகாயம் ! ஆபத்தானது !
நித்தமொரு வண்ணமாய் சித்தம் மயக்கி விடும் !

★ ஆகாய மகள் வருகிறாள் !

★ அமைதியாய் தலைதூக்கி பாருங்கள் !

(ஐந்தாம் சக்தி) **மண்**

**மண் ! பாசம் !**

★ பிரபஞ்சமாய் வியாபித்திருக்கும் பிரம்மாண்டம் !

★ கருவறை தன்னில் பிள்ளையாய்
பூமி சுமக்கும் கருணைமிகு தாய் !

★ மரங்களாய், பூக்களாய் மண்ணுறு யாவிற்கும்
உயிர் தரும் உற்றவோர் தந்தை !

**மண் ! பேருண்மை !**

★ ஆகாயம் நீல விரிப்பு என்றால்
மண் நீண்டவோர் அழகுச் சிரிப்பு !

★ நிலையின்மையை நினைவு படுத்துவதாய்
ஏற்றமாய் மலைகளும், பெரும்
மாற்றமாய் பள்ளங்களும் !

★ நீருக்கும், நெருப்புக்கள் போந்திடும்
எரிமலைக்கும் எல்லாவற்றிற்கும்
அடிப்படை எம் அன்னை மண்தானே !

**மண் ! பொக்கிஷம் !**

★ கரித்துண்டை வைரமாக்கும் அற்புதம் !
தங்கமாய் அங்கம் எங்கும் அள்ளித் தந்தே
உன் எச்சங்கள் கூட எண்ணெய் என்றானது !

அன்னையென்று அனைவரும் அறிந்ததால்தான்
அரும் புதையல்களும் உன்னிடம் கொடுக்கிறார்கள்

**மண் ! ஆச்சர்யம் !**

★ கைகள் தீட்டி கண்ணுறங்குகிறாய் !
ஒரு கையில் எரிமலை ! மறுகையில் பனிமலை !
நிமிர்ந்து நின்றால் இமயமாய்
நின்று தாழ்ந்தால் பாதாளமாய்,
நின்னுடை வியப்புகள் எத்தனை ?

★ அடிமண்ணாய் நீயிருக்க
ஆறென்ன, குளமென்ன,
ஆர்ப்பரிக்கும் கடல் வரை
தாய் மடியாய் உன்னிடம் தலைவைத்து தூங்கும் !

**மண் தாய் வீடு !**


★ மானுடம் தழைப்பது உன் மிச்சத்தில் !
★ காற்று விரியும் சக்தி கொண்டது !
★ நெருப்பு எரியும் சக்தி கொண்டது !
★ வானம் ஆளும் சக்தி கொண்டது !
★ தண்ணீர் உதவும் சக்தி கொண்டது !
மண் மட்டுமே, மரம் முதல் மனிதன் வரை
★ உயர்வாய் உயிர்தரும் சக்தி கொண்டது !

**மண்ணிடம் கவனம் தேவை !**

★ தாய் போன்று தாங்கியே
தாளாத அன்பு தருவாள் !
விலை மதிப்பற்றவள் !
மண்ணுறு மக்களிடை மண்ணை கைப்பற்ற மாபெரும் யுத்தம் !
இறுதியில் மண்தான் ஜெயிக்கிறது !
மண் மகள் வருகிறாள் !
மூச்சிழுத்து பாருங்கள்
மண்வாசனை வருகிறது !

# காதலித்தால் கடவுளாகலாம் !

கடவுளர்கள் கண்முன் தோன்றுவதில்லை ! அன்பாய், பாசமாய், பொங்கிடும் கருணையாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார் ! அதில் காதலுக்கு என்றுமே முதலிடம் ! அடிப்படை நாகரீகங்கள் அடியோடு இல்லாத போழ்து, காதலால் தான் நாகரீகங்களும், மனிதருக்குள் தான் ஒரு மனிதன் என்ற எண்ணத்தையும் இந்தக் காதல் தான் தோற்றுவித்தது !



***மக்களை காதலித்தால் மனிதனாகலாம் !***
***காதலியை காதலித்தால் காதலனாகலாம் !***
***காதலையே காதலிக்க கடவுளாகலாம் !***
***ஆம் கடவுளாகலாம் !***

*பார்ப்போமா?*

# காதலித்தால் கடவுளாகலாம் !

கண்டமென ஞாலம் கண்டதெல்லாம்,
துண்டு துண்டாய், அண்டத்தில் பெயர்ந்திட
வேற்று மொழிகளும், மாற்று வழிகளுமாய்
காற்று மட்டுமே பொதுவாய் மற்றவை வேறாய்
நேற்று முன்னோர் நிலை கொண்டபோது இக்
காதலன்றோ கலாச்சாரம் தந்தது!
பிராணிகள் போல வாழத் திராணியுமின்றி,
மக்களும், மாக்களாய் எக்கணம் வாழ்ந்திட,
புவியெங்கும் ரத்தமாய், செவியெங்கும் சத்தமாய்,
மொத்தமாய் பூமி நித்தமும் நிம்மதி தேட
பூக்களையும், வண்ணப் பாக்களையும்,
புன்னகையாய் புவனமெங்கும் கவனமாய்,
அன்பாய் இக் காதலன்றோ சமாதானம் தந்தது!
வேற்றிடை மக்களும், வண்ணங்கள் பிரித்தாலும்
போற்றிடை புரியவே, எண்ணங்கள் திண்ணமுற சொரிந்து,
காற்றிடை கலக்கும் நன்மணம் போல், நம் மனதில்
ஊற்றிடை வயக்கும் உற்சாகமாய்,
தோற்றிடைத் தோன்றி தொன்றுதொட்டு,
பாற்றிடை சிறக்கும் தமிழேபோல் இக்
காதலன்றோ காவியம் தந்தது!

அன்பெனவும், பண்பெனவும் நம்
என்பு தன்னிற் கலந்து ஏகித்து
மன்புவி தன்னில் துன்புறும் தீமைகள் தீயறுத்து
வழி தன்னை பகர்ந்து வண்ணமுற
உழி மாற்றும் உய்யமுடைத்து உய்வெய்தும் இக்
காதலன்றோ பாசம் தந்தது!
தோள் கொடுக்கும் தோழமை என்றோர்
வாள் தடக்கும் வனப்பிலும் வசந்தமாய்
நாள் கடக்கும் நட்பெனும்,
அன்பின் வலிதன்னிற்கெதிரே ஆயிரம்
களி கொண்டு தகர்த்தாலும் அதன் விழியிரண்டுப்
பார்வை தன்னில் ஆங்கே உழியடங்கிப் போகும் இக்
காதலன்றோ நட்பினைத் தந்தது!

**வாழிய காதல்! போற்றுவீர் அதன் புனிதமே!**

**காதலில்லையேல் களைப்புறும் பூமி!**

**காதல் செய்வோம்! களித்திருப்போம்! கடவுளாவோம்!**

# மழலை !



இறந்த குழந்தை எண்ணி,
இமையும், இதயமும் நனைந்து,
வருத்தத்துடன் ஓர் தந்தையின்
தவிப்புகள் !

# மழலை !

**வி**ண்ணதிர மண்ணதிர விழித்தெழக்
கண்ணதிர, தன்னுதிர மக்களென்று
தாளாது ஆசை கொண்ட தாயாரை,
மாளாது மாய்த்து வாழாது சாய்த்து
தள்ளிய பாவத்தால் தள்ளி நீ போனாயோ?

பள்ளியில் துள்ளிய பாங்கினில்
வெள்ளி முளைக்குமென வேகித்திருக்க,
முள்ளி விதையை முழுதாய் தந்து நான்
அள்ளி யணைக்க பிள்ளை இல்லையென
எள்ளி நகைத்தெனை ஏமாற்றினாயோ?

உழுது பயிரிட்டு விளைச்சலுக்காய்,
தொழுது நிற்கும் உழவனாய்,
பழுதின்றி நீ பிறக்க பரிதவித்த என்னை,
விழுதின்றி வீழு மரமாய்
அழுத கண்களாக்குதல் அடுக்குமோ?

சித்தமெங்கும் உன்முகம் வரைந்து தினம்
முத்தம் நூறு தந்தேன் எந்தன்
பித்தம் தீருமுன்னே அதன்
சத்தம் யாவும் அடங்க
ரத்தமாய் நீ மொத்தமாய் போனாயோ?

அண்டமெங்கும் ஆயிரம் பேர் தொழுதிருக்க
தண்டமாய் இவனிடை தஞ்சம் புகுந்தது தவறென
பிண்டமாய் நீ முண்டமாய் முறிந்ததை
கண்டத்தில் வைத்துக் காத்திருப்பேன்
நான்
பொறுத்திருக்கிறேன்! அந்நாள் வரை உணவை
மறுத்திருக்கிறேன்! காலதேவனை வெல்லும் வரை!

சென்று வா மகனே!
அவனை வென்று நான்
கொன்ற பின்,
மீண்டும் வா சந்திப்போம்!

# பூமியை வாழ விடு !



இது ஓர் சிறப்புக் கவிதை ! இது பூமித்தாய் தன் பிறப்பு மற்றும் தன் பூமியை அழகுற படைத்த விதம் மற்றும் இன்றைய நிலையில் பூமி காணும் பிரச்சனைகள், மனிதர்களால் ஏற்படும் இன்னல்கள் இவற்றைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன் !

அய்யா வைரமுத்து அவர்களின் பிறந்த நாளையொட்டி பண்பலை நிகழ்த்திய பரிசுப் போட்டிக் கவிதை இது !

பூமியின் தேவையையும், அந்த அன்னைக்கு நாம் செய்யும் அன்பையும் உணர வேண்டி இந்த படைப்பு !

*சுவைத்து பாருங்கள் !*

# பூமியை வாழ விடு

எரிகோளத்தில் பிரிந்து, விரிகோளமாய் விரிந்து,
கனப்புடன் தனப்புமாய், வனப்புடன் சொரிந்து நாளில்
விண்ணாகி, மண்ணாகி பூதமைந்தாய், வான்
வெளியாகி, வளியாகி வண்ணமுடன் பெரும்,
ஒளியாகி ஒருமித்தே துளிர்ப்போடு களிப்புடன்
காற்றெனவும், கடலெனவும் நேற்று முன்னாளில்
கண்டமென அண்டம் கண்டிட்ட யாவுமாய்,
பிண்டமென பிள்ளைபோல் உமைக் கருவறை தாங்கும்
அன்னையாம் பூமியின் புலம்பல்கள் கேளீர்!

கனலென நான் பாயாய் திரண்டு பெரும் பரிதியிற்
கழன்றதால் அனலென உழன்று தீயாய் புரண்ட நேரம்,
தாய்மையெனும் நோயுற்றதால்
பிள்ளைகள் வேண்டி முல்லைகள் போல்
கனிந்தேன்! சினம் தனிந்தேன்! நகைத்திட்டே
முகையுடன் முழுதுமாய் முகம் நனிந்தேன்!

காற்றையும், கடுநீள ஊற்றையும் அவ்
ஊற்றிடை ஓடி ஆற்றையும், ஆற்றிடை கூடி
போற்றிடை தேடி மாற்றாய் கடலையும்,
வேற்றாய் விதங்கள் நூறாய்
குளமாய் ஏரியாய் உளம் குளிர்ந்தேன்!
நீரும், நீரிடை உயிருமென பாரெங்கும் படைத்திட்டேன்!

மண்ணென்றும் பெரும் மலையென்றும்
திண் ணென்று தின்தோள் மடுவென்றும்,
செடிகளும், கொடிகளுமாய், மரங்களொடு வரங்களாய்,
காடென்றும், நாடென்றும் திறமுடனே திரட்சியாய்,
வண்ணமுற வகையோடு வரிசையாய் எண்ணம் போல்
படைத்தேன்!

சத்தமிடும் காகம் முதல் முத்தமிடும் குருவி வரை,
நித்தமும் ஒன்றாய் மொத்தமாய் படைத்தேன்,
ரத்தத்தில் செய்ததாய் ரசித்தபடி,
சித்தமெல்லாம் சில்லிடவே நடப்பதாயும், ஊர்ந்தே
கடப்பதாயும் பறப்பதாயும் பல்வகை சிறப்புடன் பல்லுயிர்
படைத்தேன்!

அகிலெனவும்,முகிலெனவும், மான்களொடு மீன்களாய்
மெல்லிய பூக்களுள் சில்லிய வாசங்களொடு,
ஒன்றென்றும், இரண்டென்றும் நன்றென்றும்
தீதென்றும் மனதிற் தெரிய அறிவு தந்தேன்!
நடக்கவும், பிற்கிடக்கவுமாய் நுட்பம் தந்தேன்!
வண்ணங்கள் ஊற்றிப் படைத்தேன் இப்பூமியை என்
எண்ணம் போல முன்னமே அடைந்தது மகிழ்வை!
மண்ணுளயாவும் மறுமுறை மறுமுறை படைத்தும்
என்னுளம் தன்னில் பூரணம் இல்லை!
காரணம் யாதென்று புரியாமல் ஜீரணமின்றி தவித்தேன்!
பெருந் தாய்மையோடு பேரன்புற்றதால்
பெற்றிட்ட பிள்ளைகள் நூறுகோடியெனிற் சிறிதாமோ?

ஒருத்தியாய் உயிர்களிடை அறம்பேணுவம் கடிதென்றே
என்னைப் போல் அன்னை குணம்கொண்டு
முன்னை உயிர்களை தன்னைப் போல் நினையும்
மற்றொரு அன்னை வேண்டுமென்று முடிவு செய்தேன்
மனிதனை படைத்தேன்

ஆறறிவோடு அருந்திறனும், அன்பாய் குணமும்
பல்லுயிர் பேணும் பண்போடு நல்லுயிராய்
வன்மையும், வனப்புறு திண்மையும் தன்மையாயளித்தேன்
நுட்பமும், மதித் திட்பமும் நுண்ணறிவோடு
எண்ணறிவும், ஏனை மொழியறிவும் வழியமைத்தேன்
யாவுமளித்தேன் உதிரம் அளித்து உயிர் அளித்தேன்
என் பிள்ளை இவனென்று ஏகாந்திருந்தேன்.

வளர்ந்தனன் என் மகன் கிளர்ந்தனன்
துடிப்பொடு பெரும் படிப்பெல்லாம் முடித்தனன்
வெல்லமாய், வேர் கரும்பாய் என் மகன் தனை
செல்லமாய் கொஞ்சியே பஞ்சிடை வைத்து வளர்த்தேன்
மெல்லமாய் அவனுள் குணங்கள் அழிந்தே பெரும்
பள்ளமாய் அவன் நெஞ்சில் கருணை குறைந்தது
கொலைகள் செய்வதை கலைகள் என்றும் பின்பு
வேட்டை என்றே நிதம் காட்டை அழித்தே நாட்டை கெடுத்து
வெறியோடு நெறி மறந்தான் வெறும்உணவுக்காய்
உயிர்க் கொலையொடு அன்பையும் கொன்றான்

பின்னும் வளர்ந்தனன்
மன்னை தோண்டி பொன்னை எடுத்தே
தாதுக்களையும் பெரும் வேதிக்ளையும்
இரும்பு முதல் ஈயம் வரை
துரும்பு முதல் தூசி வரை வெட்டியெடுத்தான்
மக்காத பொருள்தனை மண்ணிலளித்து
குடலிடை கலந்து என் உடல்தனை கெடுத்தான்

வேலையென்றும் ஆலையென்றும் ஆர்ப்பரிக்கும்
வண்டிகள் என மூளையென்று இவன் தந்த
புகைக் கூட்டம் பகையாய் பல்லுயிர் கொல்கிறது
நச்செனவே தெரிந்தும் மிச்சமின்றி என்
நெஞ்சிடை அளித்து அஞ்சிடவே செய்கின்றான்
என் சுவாசக் குழல்கள் துடிக்கின்றன
காதுகள் வெடிக்கின்றன அவன் சப்தத்தினால்

போரென்றும், போட்டியென்றும் அணுகுண்டுகளை
காரென்று பொழிந்தே கூரென்று குத்தினான்
குரல் வளையோடே போதும் என் இறைவ
உயிர்களென்று கோடி படைத்தேன் ஒருமித்தே
அன்பையே பரிசாய் தந்தது உலகை
தாயாய் இருந்து படைத்த நான் நாயாம் இம் மானுடரால்
நோயால் நலிந்து மரணப் படுக்கை கொண்டுள்ளேன்
மனதெங்கும் வலிக்கிறது
கெஞ்சி கேட்கிறேன்

காற்றென மண்ணென நீரென யாவிலும்
நேற்றும் இன்றும் நீ கொடுக்கும் தீமைகள்
கூற்றாய் வந்து என்னுயிர் கொல்கிறது
இருக்கின்றன சில நாட்கள் இன்னல்கள் ஏதுமின்றி
வாழ விடுங்கள் என்னை வாழ விடுங்கள்

சிலையொன்று வேண்டாம் அன்னைக்கு என்
பிள்ளைகளே கொலை செய்யாதிருங்கள் என்னை
அழித்தபின் எங்கு நீர் வாழ்வீரோ? அறிவிலிகாள்
நாணுவம் கொள்கிறேன் மானிடம் படைத்ததற்கு
வாழிய நீவிர் மீண்டும் கெஞ்சிக் கேட்கிறேன்
என்னை வாழ விடுங்கள் ஏனென்றால்
என்னை நம்பி கோடி உயிர்கள் நாடியுள்ளன பூமியில்
உம்மை தவிர அவைகள் வாழ நான்
உயிரோடிருக்க வேண்டும் என்னை வாழ விடுங்கள்


சற்றே நான் உற்று நோக்கினால்
சுற்றிடும் இயக்கந்தனில் சோர்வு காட்டினால்
முற்றிலும் அழிந்திடுவீர்கள்

கற்றவை பெற்றிட்ட அறிவு கொண்டே
மற்றவை உற்றிட்ட தெளிவுமொண்டே எஞ்சினமெனும்
கூற்றையும் வெல்லுதல் சாத்தியமோ?
எச்சரிக்கை விடுக்கிறேன்
எனதருமைப் பிள்ளைகாள்
பொறுமையின் கோட்டு விளிம்பில் பொறுத்துள்ளேன்
எல்லைகள் மீறினால் தொல்லைகள் உமதே
கோப்பையின் நீரும் கடலின்
உடலும் காலத்தால் ஒன்றே எனக்கு

பேயவள் இவ்வன்னை பெரும் பித்தொண்டே
நோயென உமை நொய்தழிப்பேன்
என்சித்தம் வெறிகொள்ளுமுன்
ரத்தம் சூடேறுமுன் நெறி கொள்வீர்

இன்றுடன் கயமைகள் நிறுத்தி
கண்ணியம் பழகுவீர்
கடமைகள் உணர்ந்தே அறங்காப்பீர்
அப்படி செய்தால்
முன்னை நிற்பேன் உம் நலனில்
அன்னையாய் உமை காப்பேன் அன்புடனே
என்னை வாழ விடுங்கள்

# வியாதிகளில் இருந்து விடுதலை !



இது ஓர் பரிசுக் கவிதை !

உலகத்து இன்பங்களில், சொத்துக்களில் தலை சிறந்த வரம் என்றால் அது நோயற்ற வாழ்வு மட்டுமே ! உடலைக் குறித்தும் நோயற்ற வாழ்வின் சிறப்புகளும், அதற்கான முறைகளும் கூற முயற்சித்துள்ளேன். ***MMC*** கல்லூரியின் சுதந்திர தின விழாவில் பங்கேற்ற கவிதை !

*ரசித்துப் பாருங்கள்...*

**** National Level Competition - Madras Medical College***

# வியாதிகளில் இருந்து விடுதலை

மண்ணுள மக்களிடை மாநிறை பொருளொடு
எண்ணுள எண்ணங்கள் எயிற்றே, நறும்
பண்ணுறு பாக்களாய் தமிழ்கொண்டு உம்
முன்னிடை வைத்தேன் !

வளங்களென இந்நிலம் கண்ட யாவிலும்
நலமென்று கண்டால் முன்னிலையாம்
தன்னிலை பேணலும், தகநெறி காணலும் !
வரமென்று தந்தான் இறைவன் இவ்வுடலை திறமென்று
உண்டெனில் அதை தீயறப் பேணலும், நோயற வாழலே !

கோடியாய் செல்வமும் கொண்டதோர் வாழ்வும்
தேடியே வந்தபோதும் கல்வியே !
முற்றும் கற்றவனாய் பெரியவோர்
கொற்றவனாய் மிகுபுகழ் கொண்டே யாவும்
உற்றவனாய் வாழ்ந்திடினும் கொடியவோர்
நோயெனும் தீமை பெற்றிடவே, முற்றிடும் அழிந்தே
முனைவேது மின்றி கூற்றிடை போந்தல் சரியாமோ?

ஆண்டவன் ஆதியிலே உலகை ஆண்டவன்
முதல் ஆண்டி வரை பிரிவென்றேதுமின்றி பரிவுடனே
வண்ணமிகு உலகை எண்ணம் போல் வாழ்ந்திடவே,
உயிரளித்தே, அவ்வுயிர் வாழ வீடாய்
கூடென்றே பேணி உடலளித்தான் உய்யுறவே !

உடலென்றாற் சிறிதல்ல ! கடலென்றே
வியக்குமாய் களிக்கவே பெரிதுறு வண்ணம்
நுட்பமாய் நரம்புகளும், அதன் வரம்புகளோடே
திட்பமாய் சதைகளும்,அளவினுக்கோர் என்பும்.
முகமென்றும், அகமென்றும், தகவென்றே
கரமென்றும், சிரமென்றும் வரமென்றே உளம் போல
நடந்திடவும், நாளில் கடந்திடவும், கால்களென்றும்,
பாதமென்றும், மூட்டெனவே படைத்திட்டான் !
பாட்டிடை கூறுவோரில்லை! ஏட்டிடை எழுதுவோரில்லை !

ஏற்றமுடையதிவ் வாழ்வு! பெருந் தோற்றமுடையது
நாளில் நாற்றமுடையது! வையத்து வாழவே!
வண்ணவோர் உடல் படைத்தான் செறிவுடன்
பரிவோடே பெரும் அறிவு படைத்தான் !

அன்புத் தோழா !
**மூலரின் திருச் சொல்லே** போல்
"உயிரார் வாழ உடம்பார் வேண்டும்"

பின் உடம்பால் வாழ யாது வேண்டும்?அவர்
பணி செய்ய பிணியின்றி நாளும் வாழ்ந்து
இனிமையாய் முனியை களைந்து
ஆற்றலுடன் போற்றலாய் ஆரோக்கியம் பெற வேண்டும்?
மாட்சிமையாய் வியாதிகளில் இருந்து மீட்சி பெற வேண்டும் !
நீட்சியென மீதியிருப்பின் அதையும் வேரறுத்து
வியாதியிலா காட்சி பெற வேண்டும் !

நம்மில்,
ஊக்கமாய் உடல் கொள்வது நற்தூக்கமே
தூக்கம் குறைந்தால் ஆக்கம் குறைந்தே

இரத்தமும் அழுத்தமாய் தாக்கம் கொள்ளும் !
ஆரோக்யம் நீக்கமாய், சோம்பல் தேக்கம் கொள்ளும் !

ஆகையினால் என் தோழா !
முடித்திடுவோம் பணிகளை முன்னதாக நாளில்
படித்திடுவோம் நன்னெறிகள் உடல் பேணுமாறே
*இனி நமக்கு வியாதிகளில் இருந்து விடுதலை !*

காலையில் ஒன்றென்றும், மதிய
வேளையில் இரண்டென்றும், பின்பு
மாலையில் மூன்றுமாய் உணவை பொறுத்தே
மறுத்திடுவோம் இடைதின்னலும், பசித்திருத்தலும் !
கடை நிசிவரை விழித்தலும் ! அடிக்கடி புசித்தலும் !
நசித்திடுமே உடல்தனை கட்டுப்பாட்டை கைக்கொள்வோம் !

ஆகையினால் என் தோழா !
உடல் காப்போம் ! உயிர் காப்போம் !
*இனி நமக்கு வியாதிகளில் இருந்து விடுதலை !*

பணிகளை செய்வோம்! கடினமுற வியர்வையோடு
பிணிகளை கொய்வோம் ! பின் தொடர்ந்தே
உழைக்கும் உடல் தன்னில் வியாதியின்
கிருமிகள் பிழைக்குமோ? அன்றேல் நிலைக்குமோ?
ஆகையினால் என் தோழா ! உழைத்திடுவோம்!
பழக்கங்களென்றே தினம் தொடர்ந்திட அஃதே
வழக்கங்களென்று வாடிக்கையானதோர் வேடிக்கை !
சான்றாய் சில சொல்வேன் ! சற்றே நீர் கேளீர் !

கூற்றைக் குடியமர்த்த புகையிலை எனும்
பகையிலை தன்னை பக்கம் வைப்பதேன்?
மெல்லுவதாயும் வாயிலடக்கிப் பின் புகைவதாயும்
உயிரைக் கொல்லுவதற்கே நோய் பழகுவதோ?
புற்று நோயைப் பெற்று நீ வீழ வேண்டாம்!
*இனி நமக்கு வியாதிகளில் இருந்து விடுதலை!*

மது குடிப்பதும் மற்றையோர்
தீது செய்வதும் சிறுநீரகம்தான் பொறுக்குமோ?
கல்லீரல், மண்ணீரல், நுரையீரலென
ஈரல்கள் யாவிலும் கீறல்களாய்
இரத்தமெல்லாம் பித்தமாகி மொத்தமாய் அழியலாமோ?
நஞ்செனவே தெரிந்தும் நெஞ்சிலிடலாமோ?
சிறுநீரகத்தை நீ சிறப்புற பேண வேண்டும் !
ஆகையினால் என் தோழ விழித்திடுவோம் !
*இனி நமக்கு வியாதிகளில் இருந்து விடுதலை !*

தீதெனவே தெரிந்தும், மாதுசேர் உறவுகள்
கலவியென்று நிலவியே களிப்பளிக்க
குறுதியிற் கலந்திடும் கிருமிகள் இறுதியிற்
ஊழ்வினை விடவும் கொடுமையாய், பால்வினை
என்னும் ஆள்வினையால் ஆர்ந்ததே எய்ட்ஸ் என்னும் எமன் !
ஆட்கொல்லி நோயில் நீ அகப்பட வேண்டாம் !
ஆகையினால் என் தோழா –
*இனி நமக்கு வியாதிகளில் இருந்து விடுதலை!*

உறுப்புகள் யாவும் இறைவன் தந்த வரம் !
ஊறுகளின்றி காத்திடுவோம் !
உயிர்காத்தல் போல் உடல்காத்தல் கடனென்றுணர்வோம் !


பிணிகளென்றோர் பலவுண்டு! ஆயின்
பிணி விளையும் களம் என்றால் அஃது
இவ்வுடலின்றி வேறில்லை! உளம் தன்னை
தெளிவாக்கி அதன் ஒளியால் நோய் தீர்ப்போம்!

உணவே மருந்தாய் தினமே கொண்டு
நிறையவே நீரறுந்தி, சோம்பல்
குறையவே நடைபழகி கொழுப்பு
மறையவே எடை குறைத்து ஓய்வெடுப்போம்!
வினைகள் சிறிதாய் உள்ள போதே!
அணையாய் நின்று முனைவுடனே
இறுதி காண்போம் இஃதில் உறுதி கொள்வோம்!
*இனி நமக்கு வியாதிகள் இடமிருந்து விடுதலை விடுதலை !*

துஞ்சிடவே வரும் பெருவினைகள் கண்டும்
எஞ்சிடவே மற்ற சிறு வியாதிகளோடே அவற்றை கண்டு
நெஞ்சுயர்த்தி, புஜம் பெருக்கி அஞ்சேல் என்க என் தோழா!
ஒழுக்கமும், நற்பழக்கமும் நமக்கு துணை !
மகிழ்வுடனே இவ்வுரை முடிக்கிறேன் ! என்றென்றும் இனி
நமக்கு

**வியாதிகளில் இருந்து விடுதலை !**
**வியாதிகளில் இருந்து விடுதலை !**

# வெளிச்சம் தேடி...



இஃதொரு புதிய படைப்பு !

புதுக் கவிதை, மரபுக் கவிதை, ஹைக்கூ விற்கு இடையில் உரை நடையாய் கவிதை முயற்சி ! வேலையில்லா திண்டாட்டத்தில் சிக்கி வேதனையுறும் இளைஞனின் எண்ணங்களின் தொகுப்பு !

*கேட்போமா ?*

# வெளிச்சம் தேடி ....

நான் !

சமுதாயத்தின் சந்து பொந்துகள் வரை தினமும் சண்டை போடும் சராசரி (ம்)! போர்க்களமாய் பூமியை எண்ணி கத்தியாய் காகிதப் பைகளோடு வேலை தேடும் வெற்று (ம்)! விழித்திருக்க சொன்னார் விவேகானந்தர் ! நான் செய்கிறேன் ! ஏனென்றால் பசிக்கும் போது தூக்கம் வருவதில்லை ! எப்போதும் விழிப்புதான் ! கனவு காண சொன்னார் கலாம்! நான் செய்கிறேன்! ஏனென்றால் நிஜங்கள் சுடுகின்றன ! வலிக்கிறது !எப்போதும் கனவுதான் ! இன்னுமா நான் யாரென தெரியவில்லை?

வேலை தேடும் விடுதலை வீரன்!? என் அறையில் எனக்கென்று சில கனவு முட்டைகளும் வண்ணத்து பூச்சிகளுமுண்டு! கனவு முட்டைகளில் வேலைக்காக வீட்டிற்காக என்றும் தங்கை திருமணம் முதல் தட்டுமுட்டு சாமான் வரை நிறைய உண்டு! தினமும் இரவில் புதைத்து வைப்பேன் பொறியுமென்று இரவு முழுதும் அடைகாத்து பின் அமைதியாய் தூங்கிப் போவேன் மறுநாள் காலையில் என் கனவு முட்டைகளை காணவில்லை ! அழுதேன்! புலம்பினேன் ! தலையிலடித்தே தடுமாறி ஓவென்று ஒப்பாரி வைத்தேன்! ராட்சத பாம்பொன்று ரசித்தபடி என் முட்டைகளை தின்று கொண்டு இருந்தது கோபமாய் யாரென்று கேட்டேன். வறுமை என்றது ! வாடிப் போனேன் ! இப்போது சொல்லுங்கள் ! நான் விடுதலை வீரன்தானே!

தினத்தந்தியின் வரி விளம்பரம் தேடி காலை நேர தேநீரை தியாகம் செய்து உண்ணா விரதத்துடன் இந்நாளை தொடங்குகிறேன் ! கடன் வாங்கிய சில நூறுகள் கடிநேர பேருந்துக்கும் காகிதம் வாங்கி விண்ணப்பம் எழுதவும் சரியாய் இருப்பதால் சாப்பாடு போன்ற சராசரி வீண் செலவுகளுக்கு இடமில்லை ! இறை வணக்கம் சொல்லி இன்றாவது ஓர் பணி கிடைக்க வேண்டி இறுக்கமான முகத்துடன் பக்கம் திருப்பினேன் இன்றும் ஏதுமில்லை விரக்தியில் சிரிப்பு வந்தது.

வாழ்க்கை எத்தனை பெரிய ஆசிரியன் அனுபவங்களால் ஓர் மனிதனை அறிவாளி யாக்கிடும் அற்புதம் வல்லியவோர் பாடம் வாழ்வில் உண்டென்றால் அது வறுமைதான்.

நான் விடுதலை வீரன்தானே?

கதவை திறந்தேன் வாசலில் ஹவுஸ் ஓனர்

வாழ்வில் படித்து கிடைக்கும் பதவிகள் போல பல நூறு பதவிகள் படிக்காமலும் கிடைக்கும் எனும் உண்மையை சென்னை சொல்லி தந்தது. எனது ஹவுஸ் ஓனரை சொல்கிறேன். இரண்டு மாத வாடகை இல்லாமல் போனதால், ஓர் மனிதன் மற்றொரு மனிதன் கண்டு பயப்படுகிறேன். தலை குனிகிறேன். ஏச்சுகளும் பேச்சுகளும் வாங்கியே மருவுகிறேன். ஹவுஸ் ஓனர் என்பது பதவியா?

வறுமையால் என் படிப்பை வெல்ல முடியுமென்றால் அறிவை தின்ன முடியுமென்றால் வாடகையின்றி தெருவில் தள்ள முடிந்தால் ஏன் படிக்க வேண்டும்? என்ற கேள்வி எழுந்தது? ஒருவழியாய் சமாளித்தேன்.

இறுதியில் ஓர் முடிவுக்கு வந்தேன்.

இன்று இரவுக்குள் ஏதேனும் வேலை தேடவில்லை என்றால் இருக்கும் இடமும் சென்று இரவு யாத்திரை இறுதி யாத்திரையாகி விடும் என்றே மிகவும் அலைந்தேன் ஏமாற்றமே கிடைத்தது படிக்காவிட்டால் வேலை கிடைக்காது என்று என் தகப்பனார் அடித்து அடித்து படிக்க வைத்தது எவ்வளவு பெரிய தவறு படிக்காவிட்டால் தான் இன்று வேலையே கிடைக்கும் என்று எவ்வளவு தாமதமாய் உணர்ந்தேன்.

வாழ்வில் வர்ணஜாலம் என்றே சொல்லுமளவு நம் முகங்களின் வர்ணங்கள் தான் எத்தனை? சீறிடும் சிகப்பென்றும், கொஞ்சவும், கெஞ்சவும், அஞ்சவுமாய் வார்த்தைகளில் இல்லா வர்ணங்கள் வழக்கில் தொடர்கின்றன.

நான் சற்றே திரும்பிப் பார்க்கிறேன். என் இதய துடிப்பின் சத்தம் மணியின் சத்தமாய் விநாடி முள்ளின் ஓலமாய் அறைந்து கொண்டிருந்தது. பணமில்லை என்று என் காதலை உதறிப் போட்ட பழைய காதலியின் முகம் ஏனோ நினைவுக்குள் வந்து போனது. அப்பாவுக்கு கால் வலியாம். தம்பிக்கு பரீட்சை. அக்காவுக்கு பண்டிகை சீர் என்று எதுவும் என்னிடம் இல்லாவிடினும் ஆண்பிள்ளை என்று மரியாதையில் அம்மா ஒப்புக்கு கேட்பாள்.

மணியாகிறது !

இருட்டத் தொடங்கியது மனதும் கண்களும் வயிறும் பொழுதோடு சேர்ந்து இருளத் தொடங்கியது என்ன செய்யலாம் கலைவாணிக்கும் கஞ்சித் தொட்டிக்கும் சம்பந்தம் இல்லையா? வலித்தது ! வாழ்க்கை ! சுவாசப்பை எங்கும் ஆக்ஸிஜன் தெளித்தேன். கைகளை மடக்கி வெட்டிமுறித்தேன் ! ஓடிச்சென்றே ஒரு குவளை நீர் பிடித்தேன் ! மனமாய் உடலெலாம் தெளித்தேன் !

**தோற்க கூடாது!**
**நான் ஜெயிக்க பிறந்தவன் !**
**பாரதி படித்தோம் ! மூசை முறுக்கி ஆசை வளர்ப்போம்** !

தொடுவானம் தொட்டு விடும் தூரமே சீக்கிரமாய் சென்று இரயிலடியில் முகம் கழுவி வாசலில் நின்றேன்.

காலம் கடந்தது. நான்கு பேர் வந்தனர். அவர்கள் மூட்டையை தலையில் சுமந்தேன். இரவு உணவுக்கு இனிதே பணம் கிடைத்தது. இதோ சாப்பிட்டு விட்டேன் !

நான் விடுதலை வீரன்? வறுமை சிறையை ஒருநாள் உடைப்பேன் !

காத்திருப்பேன் !

எனக்கு பணி கிடைத்த பின் உங்களை சந்திக்கிறேன் !

# தமிழ் பண்டிகை !



இக்கவிதையில் தமிழ் பண்டிகையாம் பொங்கலை குறித்தும், இன்றைய நிலையில் நம் பொங்கல் பண்டிகையின் அவல நிலை குறித்தும் வேதனை தெரிவித்தும் பண்டிகைகள் கேளிக்கைகள் அல்ல ! கலாச்சாரம் என்பதையும் தெளிவு படுத்திய இன்றைய நவீன உலகில் நேரமின்மை மற்றும் உறவுகளுக்கிடையே விழும் விரிசலால் எல்லாமிருந்தும், யாருமற்றவர்கள் போல் வாழும் நிலை குறித்தும் கவலையுற்று எழுதிய கவிதை !

காவ்யா மீடியா கிரியேஷனுக்காக நடந்த கவிதைப் போட்டியில் பங்கேற்ற கவிதை !

*பொங்கல் பண்டிகை*
*கவிதையாய்........*

# தமிழ் பண்டிகை

மங்களங்கள் பொங்கிடவே தைத் திங்களில் வந்தது
எங்கள் பொங்கல் திருநாள் !
காடென்றும் கரையென்றும், வயலென்றும், வரப்பென்றும்
ஏடுகண்ட சிறப்புகள் யாவிற்கும் பீடு சேர்க்கும் நன்னாள் !
பட்டாளி என்றே நிதம் பாடுபடு மக்களோர்
கூட்டாளியாய் குடும்பமாய் குலவிடும் பொன்னாள் !

பெருநாளாய் பெற்றிட்ட பேறாய் தமிழர்
திருநாளாய் நாட்டிடை களிக்கவே, மறுநாளில்
வீரர்கள் தீரம் விளங்கிடவும், வருநாளில் நிலவொளியில்
காணும் நாளாய் காண்புறும் எம் **பொங்கல் பண்டிகை !**

விழாக்கள் என்றும் மாறுவதில்லை !
விரைந்திடும் காலங்களில் கரைந்திட்டே
மறைந்திடும் மகிழ்ச்சிகளும் !
குறைந்திடும் குதூகலமும், கும்மாளமும் !

வந்தது போகியென்றே பழையன ஒழித்திடவே
வீடெல்லாம் துடைத்தே தூசி தட்டி அழித்து
தீயிடை இட்டு கும்மியிட வழியின்றி, குப்பையை
நகராட்சி வண்டியின் நடுவிலே, கொட்டி
நயம் பெற முடிக்கிறோம் எம் **போகிப் பண்டிகை** !

பொங்கலும் வந்தது !
இறைவணக்கம் முதல் இரவு வரை
இன்றியமையா நிகழ்வுகள் காண,
வண்ணத் தொலைக்காட்சி எண்ணமெல்லாம்
இருக்கவே வசந்தங்களோடு வருகிறது **பொங்கல்** !

பட்டிமன்ற நிகழ்வு கண்டால் பத்து மணியாகி விட
பண்டிகை நாளென்றே உறுதி செய்யும் காட்சிகள்
புத்தாடைகள் அணிந்தோம் பத்தாயிரம் பணத்தில்!
ஆசிகள் பெற்றிடவே அருகினிலும்
நேசிக்கும் உறவுகளாய் நெருங்கிடவும் யாருமில்லை !

கைபேசியில் குறுஞ்செய்தி மட்டுமே அன்பின் வெளிப்பாடானது !
மின்னஞ்சலில் மட்டுமே பாசம் பரிமாறப்பட்டது !
பளிங்கு கற்கள் வாசலில் பதித்ததால்
கோலங்கள் போட மறந்து காலங்களாகிறது !

வண்ணப் புதுப்பானையை வனப்புடனே
எண்ணம் போல் சித்தரித்து மஞ்சளுடன்
மங்களம் பொங்கிட திங்களன்று

**பொங்கலோ பொங்கலென்று** ஓங்கியுரைக்கும் காலம்
சென்று மின்னடுப்பில் கனப்புடன்
எண்ணெய் ஒட்டா ஏனம் கொண்டு தமிழ்ப் பண்டிகை
கொண்டாடும் பரிதாபம் !

கயலாகும் வயல்வெளி கண்டும்
வகையாய் பெரும் வரிசையாய் அறுவடை
நெல் கண்டும் முகையாய் மகிழ்வொண்டது முன்னம்!
விளை நிலமெல்லாம் விலை நிலமாகி விட
வயல்வெளி யாவும் குடியிருப்புகளாய்
அடுக்கு வீடுகளின் இடுக்குகளில்
மிடுக்குடன் கொண்டாடப்படும் தமிழ் பண்டிகை !



எட்டுமுழ வேட்டிக்கும், பட்டுப் புடவைக்கும்
கட்டுப்படா காளைகள் நாங்கள் !
நவீனங்கள் உடைகளில் மட்டுமின்றி உள்ளங்களிலும்
இதயங்களில் மட்டுமின்றி இல்லங்களிலும் புகுந்து கொண்டது

எந்தக் காலமிது ?
பாரம்பரியம் இறந்து பல்லாண்டு ஆனது !
உடல் தெரிவதே எங்கள் உடைகளுக்கு கௌரவம் !
இடைவரையுமாய் சிற்சில தொடைவரையுமாய் மானம்
விடைகொள்ள நடை கொள்ளும் எங்கள் தமிழ் பண்டிகை !

மகிழ்வுந்துகள் மட்டற்று மனம் நிறைக்கும் போது
மாட்டு வண்டிகளுக்கிடமேது? அப்படியொன்றே நாட்டினில் இல்லை !
மாட்டை ஏட்டினில் காட்டுகிறேன் என் பிள்ளைக்கு !
காட்டினில் மேட்டினில் வாழும் உயிரென்றே !
படங்களாய் மாடும் இன்று இறைவனாகி போனது !
சாட்டையும் கலப்பையும் எங்கோ மூட்டை கட்டிப் போனது !
ஏரென்று ஒன்று ஊரினில் இல்லை பாரினிலேயே இல்லை !
வாழிய எம் தமிழ் பண்டிகை !

பண்டிகை நாட்களில்
பண்டை வழக்கமாய், அண்டை வீடுகளுக்கும்,
அன்பு பாராட்டல் இஃதென் தொண்டை நாடன்றோ?
துக்கமென்று வந்திடினும் அக்கம் பக்கம் சேருவதில்லை
வாடகை வீடுகளில் பேச்சு சுதந்திரம் மட்டுமின்றி
மூச்சு விடவும் அனுமதி இல்லை ! ஆகையால்
நான்கு சுவருக்குள் வாழிய
எம் தமிழ் பண்டிகை !

தேடி நம் சொந்தங்களோடு கூடி பிற
பந்தங்களும் நாடி, ஓடிச் சென்று உபசரித்தோம் !
சொந்தமும் பந்தமும் சொற்பமாய் ஆன பின்
அற்பமாய் தோன்றும் பண்டிகைகள் !
மாமனென்றும், மருமகனென்றும் புத்தி சொல்ல சித்தி
என்றும், சிற்றப்பன், பெரியப்பன் சீறிடும் தம்பியென்றும்
இவர்களுக்கு நானும் என் இல்லாள் மட்டும் வாழும்
தீப்பெட்டி அடுக்கு இல்லத்திலும் மேலும்
தனிக்குடித்தன தர்மத்திலும்
மனதிலும் இடமில்லை தனியாய் சிரிக்கிறோம்
உண்ணவும் தின்னவுமென யாவும் தனிமையே
வாழிய எம் தமிழ் பண்டிகை !

பணமும் பணிகளும் விரிந்தே உண்மை !
குணமும் எங்கள் மனமும் சுருங்கியே
அன்னை செத்தாலும் அழுவதற்கு நேரமின்றி
முன்னை விடவும் வேகமாய் தன்னை மாற்றி
அன்பின்றி, பண்பின்றி அடிப்படை ஏதுமின்றி
மேலை நாடென்றெண்ணி புலியாக
சூடுபோடும் பூனைகள் வாழ்வெதற்கு?



எதை நோக்கி செல்கிறோம்? எனக்கு
தீபாவளியை விட பொங்கல் மிகவும் பிடிக்கும் !
தமிழர் திருநாள் என்றல்ல !
**பொங்கலுக்கு மூன்று நாள் விடுப்பு** !
பின் பொங்கல் பண்டிகை உயர்ந்தது தானே !
வாழிய எம் தமிழ் பண்டிகை !

இந்நிலை மாற வேண்டும் !
அமிழ்தாய் நம் தமிழ் பண்டிகை



அருந்திடவே விருந்தாய் பின்னொரு
புரிந்திடவே மருந்தாய் இருந்திடவே
கரும்பொடு தேன் கண்ட எறும்பாய்
பருகியதில் உருகி மருகுவோம் !
மகிழ்ச்சி கொள்வோம் ! மாறுவோம்!

தாயாய் நம் தமிழ் இருக்க அதன்
சேயாய் மூச்சுடை பாயாய் பேச்சுடை
வாயாய் நல்லன்பு நோயாய் நன்றியொரு
நாயாய் நாமிருந்து மாய்க்காதிருப்போம் !
பண்டிகைகளை உண்மையாய் மதிப்போம் !

மண்ணையாளும் மன்னவரும்
அன்னையாம் பண்டிகை தன்னை !
கண்ணைப் போல காத்தனர் தன்
பின்னை வரும் சந்ததிக்கே சிந்திப்போம் !

பண்டிகைகள் கேளிக்கை அல்ல !
கலாச்சாரம் !
நம் பாரம்பரியம் !
தன் மீசை முறுக்கி ஆசை வளர்க்கும் வீரம் !
எண்ணுவோம் ! தமிழ் பண்ணுவோம் !
வாழிய தமிழ் பண்டிகை !
வாழிய தமிழ் பண்டிகை !
வளர்க எம் தாய் தமிழ்நாடு !

# காற்று !



காற்றின் சிறப்புகளும், பெருமைக்
குணமும் தமிழால் வாழ்த்த
வெண்பா போன்ற அலங்கார
முயற்சி !

# காற்று

*நாற்றமென மெல்லுடல் மலரினுள் இசை*
*மாற்றமென புல்லுடல் குழனிலுள் உயிர்*
*ஏற்றமென யாக்கையில் கழலாய் நாளில்*
*தோற்றமென தோன்றும் காற்றே நீ வாழியவே !*

நாற்றம் : – நறுமணம், யாக்கை – உடல், கழல் – நெருப்பு

பொருள் : காற்றே நீ நறுமணமாக மென்மையான உடல் கொண்ட மலரினுள் செல்லும்போது மாறுகிறாய் துளை கொண்ட புல்லாங்குழல் தன்னில் செல்லும் போது இசையாய் மாற்றம் அடைகிறாய் உடல் தன்னில் நெருப்பாய், உயிராய் ஏற்றமடைகிறாய் இப்படி தோற்றுவிப்பன படி தோன்றும் காற்றே உன்னை வாழ்த்துகிறேன் !

# நாடு !



இஃதோர் போட்டி முயற்சி ! ஒரே வார்த்தைக்கு ஓராயிரம் அர்த்தம் சொல்லும் தமிழ் மொழியில் ஒரே வார்த்தைக்கு இரு பொருள் வருமாறு, நாட்டை குறித்து எழுதிய கவிதை !

# நாடு !

*உறையும் உறையும்*
*பறையும் பறையும்*
*வாழ்வது வாழ்வதென*
*மறையும் மறையும்*
*நாடும் நாடும்*
*முடிவு !*

பொருள் :

| | |
|---|---|
| உறையும் – உறைந்து கொண்டிருக்கும் | உறையும் – போர்வாள், |
| பறையும் – போர்ப்பறை | பறையும் – கூறும் |
| மறையும் – மறைந்து விடும் | மறையும் – வேதமும் |
| நாடு – நாடு **(Country)** | நாடும் – விரும்பும் |

பொருள் : எப்போதும் உறைந்து கொண்டிருக்கும் உறைவாளும், பறைந்து கொண்டிருக்கும்போர்ப் பறையுமாய் இப்படி வாழ்வதே வாழ்க்கை யென்றால் வேத நூல்களும் மறைந்து விடும் நாடும் முடிவை நாடும்.

# மழை !



பெருகி வரும் இம்மாசுபட்ட சூழ்நிலையில் உலகில் மழையின் தேவை குறித்தும், மழையின்றி எம் நிலை குறித்தும் வேண்டி மழைக்கு எழுதிய விண்ணப்ப கவிதை !

*இனி மழை பெய்யும் !*
*வாருங்கள் நனைவோம் !*

## மழை

***தாவு புள்ளினமும் புவி மேவு புல்லினமும் காய்கின்றன !***
***எம்மாறும் ஆறுநிலைதாண்டி தகித்து மாய்கிறது !***
***எங்கடலும் ஆடல் திடலெனமாறு முன்மாறு நிலைகொள் !***
***மழையே நித்தம் நூறு முத்தம் தருவாய் !***

பொருள் : புள்ளினம் – மான்கள், புல்லினம் – தாவரங்கள்,
ஆறுநிலை – ஆறிப்போகும் நிலை

பொருள் : தாவிக்குதிக்கும் மான் கூட்டமும், புவியில் இருக்கும் தாவரங்களும் காய்ந்து போகின்றன. எங்களுடைய ஆறும் ஆறிப்போகும் நிலையைத் தாண்டி தகித்து போகிறது எம்முடைய கடலும் ஆடல் திடலென மாறுமுன் மாறுநிலை கொள்ளும் மழையே நீ நித்தம் நூறு முத்தம் தருவாய்

# தூரத்து நிலவு அவள் !



இக்கவிதையின் நாயகனுக்கு அவன் காதலியை கண்ணால் காண முடியும் ! ஆயின் கைக்கெட்டாத தூரத்தில் இருக்கிறாள் ! தூரத்து நிலவாம் ! அவளுக்கு திருமணம் வேறொருவரோடு நிச்சயமாக வேதனையில் காதலன் புலம்பும் கவிதை வரிகள்....

*கேட்போமா ?*

# தூரத்து நிலவு அவள்

என் தேய்பிறை தூரத்து நிலவு !
தலைவன் கண்டு வளர்பிறை கண்டது !
இடையில் அமாவாசை எனக்கு மட்டும் !
என் கனியமுத நிலவுக் காரிகை
காணவில்லையென கவலை கொண்டேன் !
நடையொலி கேட்கும் போதும்
வளையொலி கேட்கும் போதும்
தலைதூக்கிப் பார்த்தேன் என் நிலவுப் பெண்ணை !

விண்மூடிப் போனதோ? மண்மூடிப் போனதோ? என
கண்மூடிப் பார்க்கையில் புண்மூடும் மருந்தென
என்னோடிருந்து சிரித்தாள் ! அவள்
என்னோடேயிருக்க ஏக்கம் கொண்டேன் !

தலைவன் காண தாக்கம் கொள்கையில்
தடுக்காதே இனி விடுத்திடு என்றாள் !
மன்றாடியும் மறந்திட சொன்னாள் !
பாசம் உறைந்தவளாய் மறைந்து போனாள் !

சென்றதிலிருந்து நடந்து செல்லும் நேரம்
அவளென்னைக் கடந்து செல்லும் நேரமாய்
நோக்கும் திசையெல்லாம் அவள்
பார்க்கும் உருவமாய் எவர்க்கும்
அடங்காதவனை முடங்கச் செய்தாள் !

இருவிழி கனத்து இமை திறந்தேன் !
இதயமில்லா இருள் இறுமாப்புடன் இருகை கொட்டிச்
சிரித்தது ! இவளோ சிரித்தபடி இதயத் தோலை
உரித்தபடி இருண்டு போனாள் !
இதயம் வெடித்து இரத்தம் துடித்து
இயற்கையாய் இறந்து போனேன் !

என்னை சிலுவையில் அறைந்து விடுங்கள் !
என் நிலவுப் பெண் பௌர்ணமியாய் மாறி
அவள் காணும் நாள் உயிர்த்தெழுகிறேன் !

## எனதன்பிற்குரிய காளியருக்கு…



பூமியை திருத்த முயற்சித்து முடியாதவனாய் தோல்வி கண்ட பின் காளியளிடம் கோபமாய் மேற்கொண்டு சக்தி தர கேட்டு விண்ணப்பம் !

## எனதன்பிற்குரிய காளியளுக்கு...........

விண்ணாகி மண்ணாகி வியப்புறும்
பொன்னாகி பூதமைந்துமாய்
கண்ணாகி யான் கருத்துறப் பசும்
பண்ணாகி நற் பைந்தமிழொடு பெரும்
புண்ணாகிப் புலம்பிடும் புவனம் காக்கும் காளி !

என்னாலியன்ற வரை முயன்று விட்டேன் !
துன்பமுந் துயரும் தன்னாலன்றி வேறில்லையாக
இன்பமு மினிதா இறையும்வேண்டி
இடும்பை களைந்து கொடுஞ்செயல் தொலைந்து
கொற்றவனாயன்பு உற்றவனாய்
மற்றவனையும் மனதுற்றவனாய் நினைந்து
மாசற்றவனாய் நேசனாயிருங்கள் !
ஈசனுமை இப்போதே காத்திடுவானென
இந்நீசரிடம் நவின்று !

ஏமாளியான பின் உனை ஏகித்துக் கேட்கிறேன் !
அன்புக் காளியளே !
தாயையுங் கொல்லுமித் தருக்கர் தம்
நோயையழிக்க மாயை யகற்ற மன்றாடுகிறேன் !

வேண்டு பொருளும் யாண்டுபல தேவையும்
மீண்டு புணர்ந்து வேண்டுவோர்க் களிக்கும்
வியப்புறு வண்ணமுடை வீரசக்தி நினதருளால்
செயற்கரிய செய்கை யாவையும்
வியற்கரிய வண்ணம் வினயம் புரிந்து
வியந்திடவே விண்ணளவு பலம் கொடுப்பாய் !

***சக்திகொடு காளி !***
***சக்தி கொடு !***
***உனது வரங்களால் எம்***
***கரங்கள் திறம் பெறட்டும் !***

## காதலர் தினக் கூட்டத்தில்.....



காதலர் தினம் வந்து விட்டது !
காதலியோடு அந்த நாளை
கொண்டாட முடியாமல்
வேதனையோடு, ஏன் என்னை
ஏமாற்றினாய் என்ற கேள்வியோடு
வலிக்கும்
ஓர் சோகக் கவிதை.....

# காதலர் தினக் கூட்டத்தில்

என் அன்பிற்குரியவளுக்கு,

உன் நலம் விரும்பும், அறிய விழையும் எண்ணத்துடன், காலச் சக்கரத்தின் கடுமையான சுழற்சியில் கடையாணி கழன்ற வண்டியென கட்டுக் கடங்கா கடுமையான காதலென பெயரொண்ட நம் உறவு சிதைந்துவிட கனவுகளின் காலடியில் நினைவுகளின் நீட்சியில் ஞாபகங்களின் எஞ்சிய எச்சத்தில் உலகின் ஏதோவோர் மூலையிலிருக்கும் உனக்கு, காதலனெனும் பழைய பதவியின் சிம்மாசனத்தின் செங்கோலேந்தி சீரியதாய் சில்லிடும் சில வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளாய், வசந்தப் பூச்செண்டென விருண்டோடிய இறந்த காலத்தை இப்போதுள்ள காலத்துடன் தினமும் ஒப்பிட்டு இமை நனைந்து இம்மடல் விழைகிறேன்.

நலம் தானா? நலமறிய ஆவலெனும் நிதர்சன மனிதரைப்போல் அறிய முற்படும் ஆவலனாய் ஆர்ந்திருக்கவில்லை நான் உன் நலம் நன்கு நானறிவேன் என்னோடிருக்கும் உயிரை கண்ணோடிருக்கும் இமையை கருவிழி அறிவதுபோல் யானறிவதில் வியப்பேதுமில்லையே காதலர் தினமானதால் வாழ்த்துரைக்கலாமென மடல் வரைந்தேன் வாழ்த்துக்கள் என் காதலியே வண்ணமுற எந்நாளும் வகையாய் பெரும் வரிசையாய் இன்னமுத இனிமைகள், இப்புவி மேற்கொண்டதெல்லாம் மேலான யாவும் பெற உன் அன்பை நினையும் ஆர்வலனாய் இதயம் நனைந்து வாழ்த்துகிறேன் !

வாழிய பல்லாண்டு நீ

பல்லாண்டு வாழப் பணித்த யான் இடைச் செருகலென இமை நனைந்து இதயம் கரைவதேன் என நினையலாம் நீ. நான் இமை நனையவில்லை இதயம் நனைகிறேன் இமை கொண்ட நீரெல்லாம் இல்லாமல் போக இரும்பாயிருந்த இதயம் இளைத்து ஈயானது. கண்ணோடு காணும் கனவெல்லாம் புண்ணாகிப் புலம்பும் பூவை நினைவாக இந்தக் காதலர் தினத்தை பூக்களற்ற என்

சுடுகாட்டில இந்தப் பூ வைத்துக் கொண்டாடுவது? என் சுடுகாட்டில் மண்டையோடுகளின் மத்தியில் காதல் கொன்ற காளையர் கன்னியரின் மரித்த காட்டிடை நீ இறந்த சமாதியின் சந்தினில், சவுக்கடிகளாய் சபிக்கும் கால தேவனின் கண் பார்வையில் கிடந்து துயருறுகிறேன்.


என் பூமியிலோர் சோலையும், சில சில்லிய மரங்களும் மிக மெல்லிய பூக்களுமுண்டு என் மனைவியென ஏகாந்தமாய் இறுமாந்து நீ இருக்க உனக்காய் பணி சென்று பணம் கொண்டு பல வாறு நின்புகழ் பாடி பாரினில் நமைப் போல் களித்திருக்க எவனுமில்லை என எண்ணம் கொண்டிருந்தேன் நீயோ பிரிவென்னும் பெருந்துயர் கொடுத்து பிழையாற்றி விட்டாய். வாழ்வாய் என் பார்வையில் உளத்தால் என் உயிருள்ள வரை வாழுவாய். உண்மையாய் என் பூமியில் எனக்கே தெரியா ஓரிடத்தில் நீயிறந்து நீண்ட நாளாகிறது உன் ஆவி அமைதி அடையட்டும். இல்லையெனில் உண்மைக் காதலரின் புனிதம் புண்பட்டு போகும் அதற்வாகவாவது பலியாய் என்னுயிரில் சிறிதை இப் போதைக்கு இரவு உணவாய் உண்டு உடனே உறங்கி விடு உன் மூச்சுக் காற்று பூமியில் படப் போகிறது.

இந்தக் காதலர் தினத்திற்கு ஏது கொணர்ந்தாயென நீ வினவலாம். என் உயிர் கொணர்ந்தேன் பாழும் இவ்வுடலையும் கொணர்ந்தேன். உளம் தவிர யாவும் கொணர்ந்தேன் செத்தவுனக்கு அஃதில்லை அதை நீ நினைக்கவும் உனக்கு அருகதையில்லை. உன் கூரிய பற்களால் கொடும் நகங்களால் என் உடல் கூடவே உயிரையும் கிழித்து உன் காதலர் தின பசியாற்றிக் கொள். வஞ்சனை செய்து எனை முன்பே குடி கெடுத்துக் கொன்றழித்துவிட்டாய் இனி அழிக்க உடல் மட்டுமே உள்ளது.

***உன் இரத்த தாகம் தீர்ந்தபின் இனியாவது இதுபோல் ஈனப் பிறவி எடுக்காமலிருக்க நினைத்து விடைபெற்று செல் விரைவாய் சென்று விடு என்முன் நில்லாதே நீண்டவென் மடல் கண்டு விரைந்தோடி என் காதலர் தின பரிசேற்று கொள்.***

***மீண்டுமொரு முறை வாழ்த்துக்கள் !***

# எனதன்பிற்க்குறியவளுக்கு



பிரிந்திருக்கும் காதலியை நலம் விசாரிக்கும் காதலன் ! எங்கிருக்கிறாய் என்று எல்லா இடங்களிலும் தேடி சுற்றி அலைந்தே அகமும் புறமும் அளவில் வேறாய் நிறைந்திருக்கும் அன்புக் காதலின் கொஞ்சும் மொழிகள் .....

*நெஞ்சைத் திறந்து*
*கேட்டிடுவோம் !*

# எனதன்பிற்குரியவளுக்கு...

அன்பிலே தோய்ந்து அளப்பறும் பொன்னாய் பண்பென்று சொல்பவை யாவும் என்புதனாய் கொண்ட எனது அன்பிற்குரியவளே! எப்படி இருக்கிறாயென எல்லோரும் போல் கேட்டுனை ஏளனம் செய்யேன் ! என் இதய வாசலில் இரும்புக் கதவிட்டு இறுமாந்து அமர்ந்திருக்கு முனை இதுபோல் உபசார வார்த்தைகளால் பிரிக்க மாட்டேன் ! நீ பிரிந்து விட்டாயென இப்பிறிதொரு பதர்கள் பிதற்றுகின்றன ! பித்தர்கள் ! நித்தமும், நினைவெங்கிலும் சித்தமெல்லாம் நீயிருக்க உன் சிந்தனை தவறியதென்றுனை நிந்தனை செய்யும் நீசர்கள் ! நமதன்பு கோட்டையின் வலிமையும் வனப்பும் இந்நாய்களறிய வாய்ப்பில்லை !

என்னோடமர்ந்து உணவுண்டபின் சுவை பற்றி கதைப்பதும் சிரித்து விளையாடுவதும் உளமறியும் ! உள்ளத்தில் உரைக்கும் வார்த்தைகள் ஊரறியுமா? ஊர்க் கதைகள் உனக்கு மெனக்குமோர் உதவா விஷயம் விடு ! மண்ணில் விட்டால் மருவுவாயென யெண்ணி உனை கண்ணிலன்றோ வைத்துக் களித்திருந்தேன் ! எங்கு சென்றால் நல்வாழ்க்கை தருவதாய் தானே நவின்றாய் இன்றெனக்கு விழியுந் தெரியவில்லை ! வழியும் விளங்கவில்லை ! விரைந்து வந்து உயிர்கொடு ! இப்படி கனவுகளின் காலடியில் நினைவுகளின் கழிப்பறையில் நெஞ்சு துடித்தது போதும் ! நெகிழ்ச்சி கொடு ! மனமகிழ்ச்சி கொடு ! எனக்கெனவோர் இறைவன் என்றோ இருந்தான் ! உனைக் கண்ட முதல் நீயன்றோ குலதெய்வமானாய் !

தாயாயென் தமக்கையாய் சில நேரங்களில் சேயாய் சில்லிடும் பாயான என் பயண விளக்கே ! பரிதவிக்க வைக்கலாமா? கண்கள் மூடவில்லை ! இந்தக் காதல் வந்தாலென்பார்கள் ! அறிவிலிகள் ! வெளிக் காணும் தோற்றத்தில் வெளிறும் வெறுமை வாதிகள் ! காதல் அகத்திணை ஆயின் காதலி மட்டும் புறத்திணையா? அகமும் புறமும் அளவில் வேறாய் அமிழ்ந்திருப்பதே அன்புக் காதல் !

*எங்கிருக்கிறாய் ?*

*வளிபடு மேகங்களோடே வெளிப்படுவாயா?*
*கிளிகளின் மொழிகளுக்குள்ளே*
*விளித்திடுவாயா?*
*மணமுறு மலர்களுக்குள்ளே அலர்ந்திடுவாயா?*
*கணமுறு மின்னலினுள்ளே ஒளி தொடுப்பாயா?*
*தேடியலைந்தேன்!*
*பூக்களிலும் வண்ணப்பாக்களிலும்*
*தேரடியில் தெருமுனையில்*
*விண்ணெட்டும் கட்டிடங்கள்*
*வீடுகளின் திண்ணைகளிலும்*
*வெறுமை ஒன்றே கண்டேன்!*
*விரைந்திடுவாய் !*
*குறைந்திடும் என்னுயிர் காக்க.*

# சமாதானம் !



ஆறாம் அறிவை ஆண்டவன் அளித்தது, பாராமிதில் போர் கொண்டு ரத்தம் செய்யவோ? பழைய காலம் தொடங்கி இன்று வரை ஆளுமை காட்டவும், வலியவன் என்பதை வற்புறுத்தவுமாய் கொலைகள் செய்ய போர் என்னும் பெயர் தேவைப்படுகிறது !

எத்தனை வலிகள் ?

எத்தனை இழப்புகள் ?

கத்தியை கீழே போட்டு விட்டு

பூக்களை புன்னகையோடு ரசிப்போம் !

சமாதானம் கொள்வோம் !

# சமாதானம்

பண்டையேடு முதல் அண்டை நாடு வரை
மாடு தன்னை காட்டிப் பீடு தன்னை சேர்க்க
மண்டையோடுகளை தண்டையாய் சேர்த்து போரெனும்
சண்டை களத்தினில் செத்து மடியும் பாரினில்
வெண்மையின் கீர்த்தியை மென்மையாய் தனப்பின்
தன்மையொடு உண்மையாய் உரைக்கவே
நன்மை பயக்க நாளும் இச்சமாதானம் கூற வந்தேன்

உளத்திற்கு பீடு உய்யவோரமைதி நா
நிலத்திற்கு கேடு உள்ளத்தில் யுத்தம்
காடுதன்னிற் திரியும் மாக்களுடை மனமது
நாடுதன்னிற் செரியும் மக்களிடை நயந்தது நாணுவமே

மறமென்றும் புறமென்றும் குணங்கள் கூறி போர்
திறமென்று திமிரொண்டு அறங் கொல்லல் சரியோ?
அமைதி கொல்லல் முறையோ?
போரொழிக்க சமாதான வாள் கொண்டு வந்தேன்!

ஆறாம் அறிவை ஆண்டவன் அளித்தது
பாரமிதில் போர் கொண்டு ரத்தம் செய்யவோ?
சித்தத்தில் தெளிவின்றி நித்தமும் சத்தமாய்
மொத்தமும் சண்டையாய் பித்தமாய் அலைதல் பிடித்ததாமோ

நேராய் மனம் நிறுத்தி, கூறாய் குணம் திருத்தி
காராய் கருணை பொங்க வாராய் என் தோழா !
வசந்தங்கள் பொங்கிடவே வண்ண சமாதானம் எடுத்து வந்தேன்

அன்பால் அகிலம் செழிக்கும் ! கருணை
பண்பால் முகிலென, நறுமிகு அகிலென உலகை
தன்பால் ஈர்த்து தரணியை சேர்ப்போம்!

சமாதானம் சொல்வோம்!
வெள்ளைக் கொடியே வெற்றிக் கொடியாம் !
தொல்லைகள் யாவும் தொலைந்தொழியும் அதனால் !

புறாக்கள் ரசிப்போம் !
பூக்கள் போலவே புன்னகை பேணுவோம் !



# காதல் !



காதலை வாழ்த்தி
ஓர் தமிழ் சாரல் !

## காதல் !

காதலைப் போற்றுதும் ! காதலைப் போற்றுதும் !
மோதலும் முட்டிப் போதலும்
நோதலும் நொந்து சாதலும் காதலுக்குண்டோ?

அழுகையும் விழுகையும் ஆர்ந்திடும் மனிதருள்
எழுகையாய் எயிற்றே என்னரும் காதல் வாழும் !

கொலையும் பிழையும் கூடிய மனத்தை
சிலைபோல் செதுக்கும் கலைநம் காதலன்றோ?

அலையும் உள்ளத்தை வலையில் பிடித்தே
களையும் துன்பங்கள் எம் காதலின் திறமே!

காதலே நீ காற்றிடை வானுடை கடலுடை
மண்ணுடை ஆயுள் கொள்வாய் வாழிய

## கவிதையாய் ஓர் கதை !




உன் அருகில் நானிருந்தால்,
உலகம் என் கையளவு !
காதல் என்றுமே இறப்பதில்லை !
உண்மை காதலர்களும் தான் !

# கவிதையாய் ஓர் கதை

என் அன்புடைப் பெண்ணே,

உன்னோடிருக்கும் நேரம் என் மணிப்பொறி அதன் மதியிழந்து தறிகெட்டு தாறுமாறாய் ஓடுகிறது ! உன் மிச்ச எச்சில் உணவு உண்கையில் என் சாத்திரங்கள் வெற்றுப் பாத்திரங்களாய் வெருண்டோடுகிறது! உன் கரம் பிடிக்கையில் கள்வெறி கொண்ட களிறுபோல் மனம் கதகளி ஆடுகிறது! உன் நாசியில் வெளிப்படும் வெப்பம், உன் கையணைப்பின் கதகதப்பு இன்னும் சிலநாள் என் இதயம் இயங்கிட உதவும்! ஒரு வகையில் நீயென் தமக்கை! என் தாளாத மனபாரம் தவிர்த்து தணிக்கை செய்கையில் ஒருவகையில் நீயென் தோழி! என் தவிப்புகள் யாவையுந் தவறையும் திருத்துகையில் ! ஒருவகையில் நீயென் ஆசிரியை ! என் குற்றமழித்து குணமுயர்த்துகையில் ! ஒருவகையில் நீயென் காதலி ! நான் களிக்கும்படி சேட்டை பல புரிகையில் ! என் தேம்பல்களை கண்ணீரை உன் முத்தத்தால் துடைக்கையில் எல்லாம் நீயே ! என் உயிரும், அற்ப உடலும் அழியா நம் அன்பிலும் நீயே நின்னைச் சரணடைந்தேன் ! நின் அன்பில் சரண் புகுந்தேன்!



***காதலர்கள் மரிப்பதில்லை !***
***அவர்களின்***
***காதலின் ஆழம் வரை***
***காலங்கள் போன பின்பும்***
***காதலால் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் !***

# வசந்த காலத் துவக்கம் !

*(பிரிந்த காதலர்கள் சேர்ந்த திருவிழா)*



வசந்த கால துவக்கம் !

உண்மையான அன்பு கொண்ட இரு காதலர்கள் காலத்தின் கட்டாயத்தில் பிரிந்து விட்டார்கள் ! ஒரு நாள் அவர்கள் சேர்கிறார்கள் ! அந்த நாளன்று காதலன் காதலியை எண்ணி ஏங்கி, கர்வம் கொண்டு தவித்து, பெருமைப்பட்டு, துடித்து இன்னும் ஆயிரம் உணர்வுகளோடு அவளை எதிர் கொள்கிறான் !

**அப்போது அவன் காதலின்**
**காட்டாற்று வெள்ளம்**
**இக் கவிதை !**

# வசந்த காலத் துவக்கம்

ஒருநாள் ஓர் திங்களன்று,

செந்நிறச் சூரியன் செம்மைபட தன் வெம்மைக் கதிர்களை நீட்டி அண்டியிருந்த, மயங்கி மண்ணுலகில் மண்டியிருந்த, இருள்தனை இமையால் உற்று நோக்கி உருக்குலைத்த ஓர் காலை நேரம். கோலக் குயிலதுவும் கும்மாளமிட நீல வானின் வைகறைக் கோலங்கள் விரைந்து மறைகின்றன. சிற்சில பறவைகளும் சில்லிடும் அப்பொழுது கண்டு சிலாகித்து இருந்தன. இன்றென்ன கொண்டாட்டமெனப் புரியாமல் எஞ்சி இருந்த இருளும் இறுதி யாத்திரை நடத்தியது. இரவெல்லாம் கனாக்கண்டு இமையாத விழிகளொடு இவளைக் காணக் குதித்தெழுகிறேன். இதுநாள் வரை கண்ட பிரிவெண்ணி, பீடு துயர்கொண்டு, இன்று பிரிவுக் காலம் கடிதே முடிந்தது கண்டு குதூகலித்து, நீண்ட பெரும் குரலோடு கொக்கரித்து நெஞ்சு நிமிர்த்தி நீண்ட புஜம் வளர்த்தி மீசை முறுக்கியபடி கண்ணாடி கண்டேன்.

ஆடியில் அரைமுகமாய் எனதும் மீதிப் பிறைமுகமாய் பிள்ளையவள் முகமும் கண்டு வியந்து, துணி கொண்டு துடைத்து துவளாது மறுமுறை கண்டேன். எத்தனை முறை கானினும் கன்னியவள் முகமின்றி கடிதே வேறில்லை, சிரித்தபடி நாணி நனிசிவந்தேன். காலைப் பொழுதுதான் எத்தனை கடியது? நேரஞ் செல்ல நெடும் பாடுபடவுள்ளது.

ஒன்பது மணிக்கு எவன் அலுவலகம் வைத்தது? அவனை எமனிடம் சேர்க்க வேண்டுமென எனதுள்ளம் தவித்தது ஐந்து மணிக்கு அலுவலகமென்றால் சீக்கிரமுனை காணலாமென ஓர் எண்ணம் வந்து போனது வந்துவிட்டது எதற்காக இத்தனை துயருற்றேனோ யாரை வேண்டிப் பரிதவித்து இருந்தேனோ அவள் என் கையருகில்

வந்தாயிற்று இனிக் களிப்புகள் மட்டுமே என கடிதே காலை நேர முதல் வேலையாம் பேஸ்ட்டை பிரஷ்ஷில் தோய்த்து பல் துலக்கினேன், திருப்தி இல்லை.

இப்பொழுது வரும் பற்குச்சிகள் படுமோசமென கண்டன அறிவிக்கை தெரிவித்தேன். நண்பனொருவன் அதைப் பிடிங்கி பற்பசையை அதிலிட்டு இப்போது தேயென்றான். பற்பசையை பல்துலக்கியின் முன்புறமிட்டு பல்துலக்க வேண்டுமென நண்பனின் வியாக்கியானம் கேட்டு நகைத்து, வெட்கினேன். பின்னும் தலைவார மறந்தது, சட்டைப் பட்டனை மாற்றிப் போட்டதென எடுத்ததெல்லாம் மறதி என்றால் மிகையாய் சிகரெட்டை தலைகீழாய் பற்ற வைக்கிறேன், சிரிப்புதான் வருகிறதடி எண்ணமெல்லாம் உனைக் காண்பதில் குறியாயிருந்ததால் எடுத்ததற்கெல்லாம் நகைக்கும்படி கோமாளித்தனம் செய்கிறேன். சித்தமெல்லாம் நீயே நிறைந்திருக்க ரத்தமெல்லாம் புது வேகம் பெற்று, நித்தமும் உனை காண்பேனென்ற போது நீண்ட புவியாளும் எமதீசன் தாளை வேண்டி அவ்விறைவனுக்கு ஆயிரம் கோடிமுறை அயராது நன்றி சொன்னேன்.

இதோ கிளம்பி விட்டேன் ! எட்டு மணிக்கெல்லாம் என் கடன் யாவும் முடித்து எவன் கண்ணும் படாதிருக்க ஆங்கேயோர் ஆலயம் சென்று அர்ச்சனை செய்து அழுதபடி தொழுதேன். பின் உணவுச் சாலை கண்டேன் ! தனித்து என் கையால் தின்ற காலம் காற்றோடு கரைந்தது எனதருமை பெண்ணாள், எனக்காய் வளைக்கரத்தோடு வகையாய், பெரும் வரிசையாய் உணவு கொணர்ந்திருப்பாள் ஊட்டிவிட! அவளிருக்கையில் அனாதை போல் அடுத்தவர் வசம் உண்பதேனென தோன்றியது ! உணவை வெறுத்து உதக நடை போட்டேன் ! என் மகிழ்ச்சி கண்டு வையம் வாய் திறந்து, மேகங்களும் அவற்றின் தாகமடங்கியது போல் மறைந்து நீலவானின் நிர்வாணம் தெரிந்தது !

- மனதைத் தவித்த மாயை மறைந்தது ! இனியெல்லாம் சுகமேயென இனிதே நடந்தே ஆட்டுக்குட்டிகளிடமும், அணில் பிள்ளைகளிடமும் குருவிகளிடமும், குன்றுகளிடமும், நனி உயர்ந்த நாவல் மரத்திடமும் நாய்களிடமும் கூட நானுனைக் காண்பதாய் நாப்பிளக்கப் பெருமை கூறினேன்.

- ஒருவழியாய் நீண்ட நடைபயணம் முடிந்து நிம்மதி அடைந்தேன் ! வந்தாயிற்று ! இனி வசந்தங்கள் மட்டுமேயென வஞ்சியுனை எண்ணி உன் இருக்கை இருக்கும் இடம் சென்று பார்த்தேன். இடம் காலியாக இருந்தது ! அடிவயிற்றிலிருந்து ஓர் பய உருண்டை உருண்டு நெஞ்சை அடைத்தது ! ஒருவழியாய் நேரம் கழிந்தது ! இதோ !

- நீ வருவாயென்று சொன்ன நாள் இதுதானா வென்று ஆயிரத்து எழுபத்தாறாவது முறைமாய் விரல் விட்டு எண்ணிப் பார்த்தேன் ! நாட்காட்டியில் ராசிபலன் கண்டேன் ! சுகமெனப் போட்டிருந்தான் ! சபாஷ் என சந்தோஷிக்க நேரம், ஒன்பது மணிக்கு இன்னும் ஒருமணி நேரமுள்ளது கண்டு உண்மையாய் வருந்தினேன் ! ஒரு மணிக்கு 3600 நொடிகள் ! மூச்சே நின்று விடும் போலிருந்தது ! இறைவனை ஏனடா இப்படிப் படைத்தாயென திட்டலாம் போலிருந்தது ! ஒருவழியாய் நேரம் கழிந்தது ! இதோ வரப் போகிறாய் !

- உன் வருகையெண்ணி கண்களால் தெருமுனை வரை நொடிக்கொரு முறை சென்ற தொலைவுக்கு நிலவுக்குப் பொட்டு வைத்து திரும்பி இருக்கலாம் ! உன் வருகை எண்ணி கணக்ள் கூட முகம் கழுவிக் கொள்கின்றன ! கண்வானத்தில் கருமேகம் திரண்டு, மண்ணெல்லாம் நனைய மழை பொழிந்தது ! தெரு விளக்கெலாம் கண் திறந்து கொள்கிறதே ! ஓ நீ தான் வருகிறாய் ! ஆயிரம் வருடம் தவமிருந்து அம்பிகையை கண்ட பக்தன்

போல தேவதையாய் உனை காண்கிறேன் ! நெஞ்சு தேனாய் இனித்து வார்த்தையின்றி விக்கிக்கிறேன் ! உதடு துடிக்கிறது ! உளறலாய் வார்த்தைகள் கொட்ட என் கண்கள் அவளைத் தீண்டிய நேரம் அவள் முகத்தின் பரவசம் ! ஓராயிரம் வர்ணங்களை ஒரு நொடியில் ஊற்றினாற் போல் நான் வந்து விட்டேன் என்பது போல், இத்தனை நாள் எங்கிருந்தாய் என்பது போல், இனி என்னைப் பிரிய மாட்டாயே என்பது போல் உன்னைத்தானடா இத்தனை நாள் எதிர்பார்த்தேன் என்பது போல் ஏதேதோ பேசியது !

★ ஆயிரம் ஒளிக்கீற்றை அரை நொடியில் கண்டவன் போல் வியப்பால் விக்கித்து திகைத்து தனக்குள் நகைத்து நின்றேன். ஓரிரு மணிநேரம் ஓயாது பேசுபவன். ஓரிரு வார்த்தைகள் பேச பயந்து ஒளிந்து நின்றேன் ! கல் போன்ற நெஞ்சுடையவன் சொல்லின்றி, செயலின்றி முள்மேல் நின்றேன் ! அஞ்சினேன் படித்தில் அடிவாங்கும் மாணவனை மிஞ்சினேன் ! காரிய கருமேகக் கேசம் கண்டேன். அதில் நாறிய நறுமுகை வாசம் கண்டேன் ! சீரிய பூ முடிப் பின்னல் தன்னில் நூறிய நெய் தரும் கன்னல் கண்டேன் ! கண்டேன் ! கண்டேன் ! அவளை ஆசை தீர அடி முதல் முடி வரை பிரிந்த கன்றை தாய்ப்பசு காண்பது போல் தவிப்புடன் கண்டேன்.

★ பின் ஓடோடிச் சென்று ஒருங்கே கட்டி என் கண்ணீர் தீரும் வரை தோளில் சாய்ந்தழுதேன் ! எங்கேயடா என்னை விட்டுச சென்றாயென அவளுமழுதாள் ! என் மார்பினில் சாய்ந்து மண்ணும் விண்ணும் நீலக்கடலும் காற்றும் சாட்சி வைத்து என்னைப் பிரியேனென சத்தியம் செய்யென்றாள்! உத்தமியவள் உளம் குளிர ஓராயிரம் முறை சத்தியமளித்தேன் ! பின்னவளை மடிமேல் கிடத்தி, தலை கோதி விரல்களில் சொடுக்கெடுத்து, நகம் கடித்துவிட்டு நானுமவளும் நேரஞ் செல்வதிலும் நினைப்பின்றி நீடுநேரம்

கதை பேசிக் களித்திருந்திருந்தோம் ! மதிய உணவை ஊட்டி விட்டாள் ! எழுதி எழுதி வலிக்கலாகாதென கரம் பிடித்துவிட்டாள் !

★ தீனி தின்னக் கொடுத்தாள்! திகட்டாதபடி முத்தமிட்டாள் ! பின்னவள் வீடு செல்லும் நேரம் வந்தது ! ஆயின் பாருங்கள் .

★ இருவரும் கலங்கவேயில்லை ! என்றோ ஒருநாள் பார்க்கும் காலம் ஒழிந்துவிட்டது ! இனி என்றென்றும் பார்க்கும் காலம் ! இன்று போனால் நாளை ! நாளை போனால் மறுநாள் ! அழுதலுக்கு அறவே வேலையில்லை !

தீமையெல்லாம் ஒழிந்து போனது ! திரண்ட மேகம் இணைந்ததும் திரளும் மழையாய் நாங்களும் இணைந்து விட்டோம் ! இனி பாரெல்லாம் மழை பெய்யும் ! பண்ணு தொழில் பெருகும் ! எங்களன்பு கண்டு பூமி குளிர,

யாவரும் சௌக்கியமாய் நூறாண்டு வாழ்வர் !

வாழிய எம் அன்பு !

வாழிய என் அன்புப் பெண்ணாள் !

## இனிது ! இனிது ! வாழ்வு இனிது !

உண்மையில் வாழ்க்கை இனிது தான்! உதிக்கின்ற சூரியனும் தொடங்குகிற நாளும் யாவர்க்கும் ஒன்றுதான் ! இறைவன் நல்ல நாளென்றும், கெட்ட நாளென்றும் இரண்டு படைப்பதில்லை! நம்முடைய எண்ணங்களாலும் குணத்தாலும் அதை முடிவு செய்கிறோம் !

என்றும் நல்ல எண்ணங்கள் கொண்டு ஒவ்வொரு நொடியும் முயற்ச்சித்தால் வாழ்வு இனிமையே ..........

## இனிது ! இனிது ! வாழ்வு இனிது !

★ நெஞ்சினை நேராக்கி வாய்மை நெருப்பிடை விழியொடு
நஞ்சினை நிகர்த்த பொய்மை மறந்த என்றும்
உண்மையே புகர்ந்து வன்மை தகர்ந்து நாளும்
நன்மையே புரிந்து நலம் யாவும் எய்திடும்
அறமொண்ட வாழ்வே திறமொண்ட தென்றே
சத்தியம் நித்தியம் பேணிட வாழ்வு இனிமையே !

★ அன்பிற் புதைந்து ஆருயிரை யெல்லாம்
கண்ணிடை கொண்ட மணியாய்
மண்ணிடை வைத்துப் பேண,
என்பினிற் சதையும் குருதியோடு உறுதியாய்
சுற்றத்திலும், சுற்றிய உற்றத்திலும்
கொற்றவனாய் கொடி பறக்க வாழ்வு இனிமையே !

★ அயற்சியிலாது முயற்சியோடு நாளும்
பயிற்சியோடு பலமும் கொண்டென்றும்
அலர்ந்தமலராய் மலர்ந்த அகமொண்டு
உலர்ந்த சருகாய் சோம்பல் உதறித் தள்ளி
தளர்ந்த எண்ணங்களை கிளர்ந்த வண்ணமுற்றி
வளர்ந்திட வானமளவு வாழ்வு இனிமையே !

★ உள்ளம் யாவினும் உண்மைக் காதலாய்
கள்ளம் அகற்றி பள்ளம் தேடி வரும் வெள்ளமாய்
பிள்ளைகள் போல் பிறிதறவாடி வெள்ளை மனமாய்,
முல்லையாய் முகம் சிரித்து முழுதாய்
வாழ வாழ்வு இனிமையே !

★ இனிதென்ற வாழ்வை முனிதென்பதாக்கி
தனிதென தான் வாழ்ந்து நல்லென்ற வாழ்வை
பிணிதென பிதற்றி கல்லென்று வாழாமல்,
மறை பகன்று இறைதனைப் போற்றி
கறையற்ற மனம் கொண்டிருக்க எந்நாளும்

★ இனிது ! இனிது ! வாழ்வு இனிது !

# திருவே போற்றி !



திருவெனும் செல்வத்தைப் போற்றி !
5 விதமான அலங்காரங்கள் !
கண்களை திறந்து பாருங்கள் !
திருமகள் வந்து விட்டாள் !

அலங்காரம் – 1
அலங்காரம் – 2
அலங்காரம் – 3
அலங்காரம் – 4
அலங்காரம் – 5

## அலங்காரம் - 1

போற்றி மொழிவோம் திருவை தினம்
தூற்றிப் பழியும் தாழ்வையவள்
மாற்றிக் கழிந்தே வாழ்வையினி
ஏற்றிப் பொழிவாள் அப்பாவை.

## அலங்காரம் - 2

மண்ணிடை சார்ந்தோர் மாண்புடை கருவாய்,
விண்ணிடை போர்ந்து காண்புடை உருவாய்,
கண்ணிடை தினம் களித்திட தனமெனும்,
பெண்ணிடை மனம் அளித்திட்டேன் !

## அலங்காரம் - 3

ஓடட்டும் துன்பங்கள் ! பரிதிமுன் பனிபோலினி
ஆடட்டும் இன்பங்கள் ! கூடட்டும் ! பாரெட்டும் !
வாடட்டும் ! வஞ்சனையதை உலகு சாடட்டும் ! இனி
தேடட்டும் திக்கெட்டும் திருவை எந்நாளுமே !

## அலங்காரம் - 4

தனமே யுன்னைத் தேடியலைந்தே தினம்
மனமே வாடிப் பெரும் கனமே கொண்டு
விழிகள் இரண்டும் சுமைகள் நீராய்
வழிகள் தேடிப் பலப்பழிகள் சொல்லி
மஞ்சிடும் நீராய் துஞ்சி விழிகனத்து
அஞ்சிடும் கண்ணுடைப் பெண்ணிடை உன்
கொஞ்சிடும் கடைக்கண், கண்டே கெஞ்சிடும்
என் நெஞ்சிடும் ஒலிகேட்டு,
எஞ்சிடும் எம்மக்கள் ...
(முதலிலிருந்து படிக்கவும்)
விஞ்சிடும் நெஞ்சுடனே நஞ்சினை
நிகர்த்த வறுமை யாவும்
பஞ்செனவே பறந்திட
வாழ்த்துவோம் ! வாழிய நீ வனப்புற
வண்ணமுடனே !

## அலங்காரம் - 5

தாக்கிடும் வசைதரு துயர் பறந்து புகழ்
ஆக்கிடும் திசையெல்லாம் நம்பெயர் சிறந்து – துயர்
போக்கிடும் விசை தரு சக்தி திறந்து பாரெனை
தூக்கிடும் துய்யவொரு மகனென எந்நாளும்
திருவே துணை என்போம் !

# மழை !




மழை நேரம் சுகமானது ! ஓர் அன்னையின் தாலாட்டைப் போல ! மழையில் நனைந்து கொண்டே ஈரமான இப்பூமியையும் மழைநேர கொண்டாட்டங்களையும் ரசிப்பது ஓர் அழகுணர்ச்சி ! மழையை விரும்பாதவன் மனிதனல்ல என்பேன் அத்தனை அழகு !

*வாருங்கள் நனைவோம் !*

# மழை !

ஒருநாள் ஓர் மாலை நேரம்,
சில்லிடும் குழலில் மிக
மெல்லிய தூறலின் வல்லிய வனப்பில்,
தன்னிலை மறந்தே தாங்கொணா மயக்கம் கொண்டேன் !
எழில்களென்றே இயற்கை சமைத்த
பொழில்கள் கண்டே இதயம் நனைந்தேன் !
மங்கிய மாலையில் இருள்
தங்கிய மேகங்கள் அவை சிந்திய நீரலை
சிந்தையைக் குளிர எந்தையாம் இறைவன்
தந்த விந்தையாம் இப்பூமியை
முந்தையே நினைத்து உதக நடை போட்டேன்!
சிற்சில பறவைகள் என் முற்சென்றே
சத்தமாய் முத்தமிட்டது !
தலை நிறையப் பூவைத்தே மரங்களும்
கலைப்பொருள் போலே கண்ணுற்றது !
மெல்லமாய் நனைந்தேன் !
நனைந்திடல் ஓர் சுகமென்றால் மழையில்
அழகை நினைந்திடல் மறுசுகம் ! மழை !
நிறைய மனங்களின்
இணைதல் படலம் !
உடல்களின்
பிணைதல் படலம் ! அரங்கேற்றம் !
மழை !
மறுஜென்மம் !

# இருட்டு !



இருட்டு ! நிரந்தரமான நிதர்சனம் !
இந்த இரவு நேரத்தை அதன் அழகை
விஸ்தாரத்தை அற்புதத்தை சொல்ல வரிகள்
போதாது !

விளக்கை அணைத்து
இருட்டை ரசிப்போம் வாருங்கள் !

# இருட்டு !

இருட்டு ! **நிச்சயம் !**
வெளிச்ச பூமியின் எதிர்ப்பதம் !

ஆடைகள் ஏதுமில்லா ஓர் அழகிய நிர்வாணம்!
இருட்டு **நிரந்தரம் !**

மின் இணைப்புகள் துண்டிக்கப்படும்போது
மிச்சமிருக்கும் நிதர்சனம் !

சுரப்பிகள் சுதந்திரமாய் இயங்கும் சூழ்நிலை !
களைப்புகள் கரைந்து போகும் காலம் ஆழ்நிலை தியானமென்றும்,
உறக்கமென்றும் பெயர்கள் நூறு ! ஆயினும் கிறக்கம் ஒன்று!
இருட்டு ! சாத்தானின் வேலை நேரம் என்பார்கள் !
உண்மைதான்!

மானிட சாத்தான்கள் வரம்புகள் மீறும் மட்டற்ற நேரம்!
இல்லையில்லை !
கெட்டவை யாவும் பழகிப் பார்க்கும் மட்டமான நேரம் !

**இருட்டு இனிமை**

வெள்ளி மீன்களின் துள்ளு விளையாட்டை
அள்ளிப் பருகும் ஆனந்தம்!
மொட்டை மாடியில் கைகள் விரித்துக் காற்று வாங்கும் சுகம்!
நிறைவேறா கனவுகள் யாவும் நிதானமாய்
அசைபோடும் நிம்மதி நேரம்!

விடலைகள் ஜோடி சேரும் விழா நேரம்!
வெற்றியின் விளக்கங்களும்,
தோல்வியின் சப்பை கட்டுகளும் அரங்கேற்றம்!
இந்த இரவு விருந்தில் இன்பங்கள் இறுதி பெறுகின்றன!

## இருட்டு உண்மை !

வேஷங்கள் விலக்கப்பட்டே முகமூடிகள் கழற்றி வைக்கப்படுகிறது!
ஆடைகள் குறைந்தே சில நேரங்களில் அவிழ்க்கவும் படுகிறது!

## இருட்டு சுதந்திரம் !

நுனி நாக்கின் மொழிகளுக்கு ஓய்வு கிடைத்தே
உணர்வுகளின், சிலருக்கு, உணர்ச்சிகளின் உளறல் !
இரவில் சுயம் காண்போம் !
மயக்கமடைய சிறிது மது காண்போம் !

தன்னிலை மறந்தே தாளாத ஓய்வெடுப்போம்!
விளக்கை அணைப்போம்!
விரைவாய் கண்களுக்குள் நமை தேடுவோம் !
ஒளிந்திருக்கும் மிருகத்தை ஓடவிரட்டுவோம்!

## வாழ்க்கை நமதே !




தன்னம்பிக்கை தலையிலேறி விட்டது !

இரத்தமெங்கும் சக்தி !

நெஞ்சமெங்கும் வேகம் !

மீசை முறுக்கி நெஞ்சு விரிப்போம் !

ஆசையுடன் பூமி காத்திருக்கிறது !

வாருங்கள் !

வாழ்க்கையை ஜெயிப்போம் !

## வாழ்க்கை நமதே !

காலங்கள் மாறிடவே புதுக்
கோலங்கள் தோன்றியது ! ரத்த
நாளங்கள் யாவினும் நம்பிக்கை நயம் பெறவே
பாலங்கள் செய்திட்டே வாழ்வை கடத்திடுவோம்!

வண்ண ஒளி தெரிந்திட்டே வசந்தமாய்
எண்ணமெல்லாம் திண்ணமுற வானம் கண்டோம்!
நிந்தனை செய்யுமிந் நீசர் தமிடமிருந்து
சிந்தனைகள் விரிந்திட்டே சிறப்புறு பெற்றோம்!

பண்ணு தமிழ் பாடல் தன்னால்
எண்ணு மொரு தேடல் யாவும்
மண்ணுலோர்க்களித்தே விண்ணவரின் வீடு பெற்றோம்!


★ தந்தையரின் தவிப்புகள் யாவும் அவர்
சிந்தையின் எண்ண மீதியும், தமிழ்
தந்தவொரு அறிவு தன்னால்
செறிவுடன் போந்தோம்! சென்று வென்றோம்!

★ நோயெலாம் அழிந்தே நயில்
மாயையாம் மயக்கம் ஒழிந்தே
பாயை போல் படர்ந்தே பாட்டுக்கள் படிப்போம்!

★ நடந்து செல்லும் பாதையெல்லாம்
கடந்து சென்றே நம் துன்பமெல்லாம்
விரைந்து மறைந்தே
கரைந்தே காலத்திற் புதைந்து விட,
வெற்றி ! வெற்றி எனறே
சுற்றி நின்ற பகைக் கூட்டம் தள்ளி !
பெருமை கொள்வோம் ! பெயரெடுப்போம் !

★ வையகத்தில் யாருமில்லை, நம்மை வெல்ல !
கையருகே வானம் ! கனவுப்
பை நிறைய ஆசை ! லட்சிய
நெருப்பில் விழுந்திடுவோம்! சுட்டபொன்னாய்
எழுந்திடுவோம்!
மீசை முறுக்கி நெஞ்சு விரிப்போம் !
ஆசையுடன் பூமி காத்திருக்கிறது!

★ வாருங்கள் வாழ்வோம்!



# ஹைக்கூ கவிதைகள் !

புதுக் கவிதை, மரபுக் கவிதை, உரைநடைக் கவிதை என்று தொடர்ந்த எண் முத்துச் சரத்தில் ஹைக்கூ முத்தும் இடம்பெற புதிய முயற்சி !

மற்றவை கவிதைகள் என்றால் ஹைக்கூ கவிதைக் குழந்தை ! அதன் கொஞ்சல் மொழிகள் கேட்போம் வாருங்கள் !

## ஹைக்கூ புதுமைகள்

★ ஆசைகள் வெடிகளாய் சிதறி விட்டது!
கனவுகள் ராக்கெட்டுகளாய் பறந்துவிட்டது!
சிவகாசிச் சிறுமி!

★ பாம்புகள் தன்குட்டியை தானே
தின்னும் என்று புத்தகத்தில் படித்தேன் !
சிசுக் கொலை !


★ கடவுள் மீது எங்களுக்கு
கடும் மரியாதை உண்டு !
லட்சுமி வெடி!

★ கொழு கொழுவென வளர்த்து
நிறைய உணவு கொடுக்கிறார்கள் ! ஆனால்
தினமும் என் நண்பர்கள் காணவில்லை!
கசாப்பு கடையில் ஆடு !

★ பூமியில் இடமில்லை!
புத்தகத்தில் பாடமானேன்
நான் சிட்டுக் குருவி!

# வரங்கேட்டல் !





அன்புக் காளியளிடம் என் அன்னைத் தமிழோடு
வரங்கள் கேட்கும் வண்ணமிகு படலம் !
கெட்டவையாவும் கெட்டொழிந்து காளியளின்
முன் நின்று வரங்கேட்கும் கவிதை !
காளியள் வருகிறாள் !

கண்முண்ணே....

## வரங்கேட்டல்

மண்ணிடை மக்களிடை மாநிறை அன்பொண்டு
மாயையாம் மயக்கங்கள் மருந்தளித்து;
விண்ணிடை வானவர் விரைந்தேத்தி தொழுவே
வியப்புறு வித்தக விருந்தளித்தாய் ! யாம்
பண்ணிடை வைத்துப் பணிந்தே தமிழ் கொண்டு
பாக்களை பூக்களாய் தொடுத்தே என்
கண்ணிடை தோன்றும் கனவுகள் எல்லாம்
கவிதையாய் உன்னிடம் விடுத்தேன் ! உன்
முன்னிடை நின்றே வரங்கேட்க அவை
என்னிடை தந்தே எமக்கருள் செய்வாய்!

கரங்கள் நீட்டியும் என் தமிழ் கொண்டே
சிரங்கள் பணிந்தும் காளியள் உன்னிடம் விழி நனைந்தே
அறங்களும் அவைகாண நல்வழி கூறும்
திறங்களும் தந்தே மனதில் உரம் தர கேட்கிறேன்!
முன்னை செய்த தீவினை யாவும் இன்றே
என்னை விட்டொழிந்து கண்ணில் விழும் தூசியாய்
பின்னைத் தொடரும் ஊழ் மாற்ற
அன்னை உன்னிடம் கேட்கிறேன்!

தீயினை யொத்த உள்ளம் தந்தே என்
நோயினை யாவும் நொய்தழிப்பாய் ! வெறும்
வாயினில் கூறும் வார்த்தைகளல்ல ! உன்னிடம்
தாயினைப் போன்றே தாளாத பாசம் கொண்டேன்!

எண்ணங்கள் யாவிலும் புது வண்ணங்கள் தருவாய்!
திண்ணமாய் நற்கருத்துக்கள் ஓர் கிண்ணமாய் தருவாய்!
கண்கள் தெளிவாக்கி மனப்புண்கள் தனையாற்றி
பிணக்குகள் தனை மாற்றி நாளில்
எண்களால் கணக்கிடா அளவுடை நற்பண்கள் தருவாய் !

கவி தந்தாய் ! இப்புவி சொல்லும் மொழி கேட்க
செவி தந்தாய்! வழி சொல்ல மறுத்தாய் !
ஊழி என்றாய் ! இன்று
விழி இரண்டிற் இருள் தந்தே பெரும்
பழி கொண்டாய் ! யாம்
இழிவுகள் கொண்டே அழிவுகள் கண்டோம்!

நல்லன யாவுமழிந்தே நாளில்
நன்றல்லன மட்டும நயந்து வெறும்
கல்லென வாழ்ந்தே காலம் செல்கிறோம் !

மாற்றம் தருவாய் !
ஏற்றமுடமன் நல் எண்ணமுடை
தோற்றம் தருவாய் !

எருமை மீதி வரும் காலனாய் எமை
சிறுமை செய்யும் வறுமை யழிப்பாய் !
இருள் கொண்ட எம் உள்ளந் தனில்
அருள் தந்தே அன்பளிப்பாய் !

அன்புக் காளியளே,

கேட்டிடும் வரமெலாம் தந்து, மனப்பேயை
ஓட்டிடும் வழி சொல்ல வேண்டும் !

காட்டிடும் கண்ணருள் தன்னால் இருள்
மூட்டிடும் கெட்டவை அழிய வேண்டும் !

நீட்டிடும் நின்னருள் கொண்டே உள்ளத்தை
பூட்டிடும் மயக்கங்கள் புதைந்தழிய வேண்டும் !

அழுது புலம்பும் ஆற்றாமை நீக்கி நல்
பொழுது புணர வேண்டும் !

கண் திறந்திட வேண்டும் ! நற்
காலம் பிறந்திட வேண்டும்!

மண்புவி இதன் மேலே எந்தன்
மாண்பு சிறக்க வேண்டும் !

சுற்றி நிற்கும் தீமைகள் யாவும்
பற்றி எரிய வேண்டும் !

நோக்கங்கள் யாவும் சேர்ந்து மன
ஏக்கங்கள் தீர வேண்டும் !

தாகம் தீர்ந்த மேகமாய் எந்தன்
மோகம் முற்றுப்பெற வேண்டும் !

தாழ்வை நீக்கியே என்
வாழ்வை மாற்ற வேண்டும் !

நெஞ்சத்து கனவுகள் யாவும்
நேர்பட தந்திட வேண்டும் !

கை தொழுகிறேன்
என் காளியளே !

கண்முன் வந்திடுவாய் !

# காற்று !



காற்றின் பெருமைகளும், காலத்தால் நிறைந்தே தென்றலாய், புயலாய் வாடையாய் நூறு பெயர் கொண்டும், எல்லாவற்றிற்கும் மேலாய் அனைவரது சுவாசமாய் வாசமாய் நிறையும் காற்றை வாழ்த்தி ஓர் மரபலங்காரம்.

## காற்று

(மரபுக்கவிதை)

வளியே !

★ நின்னுடை புகழ் சொல்ல
பண்ணுடை இசையும் அது
தன்னுடை அறிவும்
என்னுடை தமிழும் எல்லையாமோ ?

★ நீண்டவெளி தன்னில்
நிறைந்தே, கண்ணிற் மறைந்து
கரைந்தே ஓர் கடலாடி மண்ணுறு
உயிரிடை உடலாடி விரைந்தே வருகிறாய்!

★ இறையாய் நாளில் இயங்கும் சக்தியாய்
நிறையாய் எந்தன் நெஞ்சகம் நிறைந்தே
நிதமும் இதயம் இயக்கும் உதயம் நீயன்றோ ?

★ காற்றெனவே பெயரொண்டு பெரும்
போற்றிடவே புகழொண்டு தோற்றம் கொண்டாய்!
கூற்றே வந்து கூட்டிச் செல்லும் அருங்
காற்றே எம்மை நீ கால்நொடி கைவிடினும் வாழிய !

★ தேடிய பெருஞ் செல்வமும்
கூடியவோர் சொற்தமும்
நாடிய நல்லுறவுகளும்
ஓடினாலும் காலத்தில் கிடைத்திடுமே !

★ காற்றே நீ நின்று விடின்
சென்று விழும் காலத்திற் தன்று விட்டே
கொன்று விடுவான் காலன் !
நன்றெனவே உன்னை நான்
நலம்பெற உரைப்பேன் வாழியவே !

★ பூரக, கும்பக, ரேசகமாய்
ஊரகத்தே யோகத்து தாரகமாய்
சித்திகள் தந்திரு உத்தியும்
சக்தி தரு புத்தியும் நீறன்றோ ?

★ தங்கு தடையின்றி எங்கெங்கும் நிறைந்தே
அங்கத்தில் உறையும் அற்புதமானாய் ?
விண்ணிலென்றும் மண்ணிலென்றும்
வடக்கிழக்காய் நடைபழகி பின்
தென்மேற்காய் திசை கடந்து
பருவத்தில் மழை செய்யும் உருவமே நீயன்றோ ?

★ நாற்றமாய் உன்னில் கனமும்
ஏற்றமாய் மணமும்
குணமும் வந்திடினும் இயல்பில்
மாற்றங்கள் கொள்வதில்லை நீ !

★ நடந்தால் தென்லென்றும்
கடந்தால் புயலென்றும்
சுழன்றால் குறையென்றும்
வாடையாய், வசந்தமாய் வண்ணங்கள் நூறு கொண்டாய்

★ போற்றியுனைப் பாடுவேன் !
காற்றே நீ

வாழிய ! வாழியவே !

# முடிவுரை

இதுவரை என் கவிதைகள் வாசித்த அனைத்து இதயங்களுக்கும் நன்றி ! ஒவ்வொரு கவிதையும் ஒரு பிரசவம் போல ! இவை கவிதைகள் அல்ல ! என் காதல் குழந்தைகள் ! ஒவ்வொரு படைப்பாளிக்கும் கிடைக்க வேண்டிய மிகப்பெரிய சன்மானம், பரிசு என்ன தெரியுமா ? பாராட்டுக்கள் மட்டும்தான். வேறெந்த உலக விஷயங்களும் ஓர் எழுத்தாளனுக்கு திருப்தியை தருவதில்லை !

ஆகையால் என் தமிழ் வாசிக்கும் அனைவரும் தங்கள் எண்ணங்களை **9790903167** அல்லது **9790903169** என்ற எண்ணிற்கும்

**iamramshankar@rediffmail.com**

**sindhu_sdnm@yahoo.co.in**

என்ற வளைதள முகவரிக்கு தயவு செய்து அனுப்புங்கள் ! உங்கள் ஒவ்வொரு வாழ்த்திலும் நான் வாழ்கிறேன் ! எனக்கு ஆதரவு கொடுத்து என்னை எழுதத்தூண்டிய என் அன்பு மணிமேகலை, சதானந்தனுக்கும், நண்பர்கள் யாவர்க்கும், அலுவலக மேலதிகாரிகளுக்கும் அன்பாய் தோள் தட்டிக் கொடுக்கும் அத்தனை நெஞ்சங்களுக்கும், சாருஹாசன் ஐய்யா அவர்களுக்கும், கல்லூரி முதல்வருக்கும், ஆயிரம் கோடி நன்றிகள் ! நன்றி ! நன்றி !



*மீண்டும் வருவேன் ! சந்திப்போம்.*